புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்து சாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

ஸ்தாபிதம் (1889)

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, ரூ. | 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: | ,, ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | சதம் | 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | ரூ. | 9-40 |
| ,, அரைக்கலம் | ரூ. | 5-00 |
| ,, காற்கலம் | ரூ. | 3-15 |
| ,, ஒரு அங்குலம் | சதம் | 65 |

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௭ } யாழ்ப்பாணம்:—குரோதனஇல ஆடிமீ ௩௨; (1925 ஜூலாய் 16) வியாழக்கிழமை. { இலக்கம்—௫.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகனருள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுக்கு

**ருக்மணிகுக்கர்தான்.**

கனம் எட்டியாபுரம், ராஜா, டாக்டர் வரதராஜுலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனுல் ஒருமணிக்குள் கஷ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அளவு | ஒருவர் | 2 | 4 | 6 | 8 பேர். |
| விலை | ரூபா | 13. | 18 | 22 | 27. 33. |

விபர புத்தகம் இனும். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயபுரம், மதராஸ்.
(Y. 45.)

[ ESTABLISHED 1609 ]

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO.** (*SouthArcotDistrict*).

## ஏ ஜ ண் டு தே வை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது
உ த் த ர வா த மு ள் ள து.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஒளஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

**லேகியத்தின் முக்கிய குணமாவது.**

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காக இதனை மிகவும் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

[illegible] 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் [illegible] சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபாற்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். மேலூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது மேற்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros.
Porto Novo.
(Y. 38).

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

**Hakeem, M. Mohamed Ebraheem & Co;**
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
**POTO-NOvO (South India)**

அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத் திடத்தையும்
அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது
உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும பரிசு பெற்ற
மதன மோஹன

## சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

அசல் பாகம்!

பரிசுக்ஷிக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினுலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

### அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இல்வாழ்க்கையிலே நாம் என்றும் கண்டிராத சித்தானந்த கெம்பீர சித்சுகவிளைப நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோஹத்திய "மகாசஞ்சீவினி" இதுதானோ? என்றும் பலமுறையும் புகழ்வார்கள். ஆணாகப் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே குருநோய்வாயப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினுலும் தேஹத்திற்கு சத்காரணமாகிய நல்லிரத்தத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினுலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், சீத்திராபங்கம் என்னும் ஓர்வித கொடிய நோயினுல் எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நரம்புகளுந் தளர்ந்து ஐம்புலன்களின உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேஹாயாசம், இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடகர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருட்யசக்தியின் குறைபாட்டினுல் ஏற்பட்ட பலவிதமான நோய்களினுலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பேரும் பிறகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம்செய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான் என்று நாம் சொல்லவேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமைக் குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். பரிக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித இமிட்டேஷன் லேகியங்களைய் மேற் சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைத் தருவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. மேற் முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனும்.

| | | |
|---|---|---|
| 40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | | 10—0—0 |
| 20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | | 5—0—0 |
| பரிக்ஷைக்கு 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | | 3—0—0 |

வி. பி. தபால்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணு 12ம், அரைபாகத்திற்கு அணு 7ம், கால்பாகத்திற்கு அணு 5ம் பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புகிறவர்களுக்கு போஸ்டிங் சார்ஜ் இனும்.

முக்கிய கவனிப்பு:—பினங்கு, சிங்கப்பூர், குலாலாலம்பூர், நெட்டால், மோரீஸ் முதலிய வெளிப்பிரதேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணமாக மணியாடர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும்.

நமது விலாசம்:—

ஹக்கிம், எம். முஹம்மது இபுருஹீம் அன்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூநாநி வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).

(Q. 63).


**மிருகத்தின் கொழுப்பு மலிவுதான்;**

ஆனுல் அது சேர்ந்தால் நல்ல தைலமுண்டாகாது. மிருகக் கொழுப்பினுல் தைலம் செய்வது சுலபமே. விலையும் சாசமாகும்.—ஆனுல் அது பொதுஜனங்கள்மனதிற்கு ஒப்பாது.

**லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்.**

செய்வதில் இந்தத் துர்நாற்றமுடைய மிருகக் கொழுப்பு விலக்கப்படுகிறது. ஆகையினுலே அது மிகவும் உயர்ந்த மருந்தாகிறது. மனதிற்கு ஒத்துமிருக்கிறது.

5—L—25.




(Y. 41. c.)

ஆறுமுக நாவலரவர்கள்
அச்சிற்பதிப்பித்த
தமிழ்ப் புத்தகங்கள்
வண்ணார்பண்ணையில்
இனி
சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார்
அவர்களிடம்
விலைக்குப் பெற்றுக்கொள்ளலாகும்.
1-6-25. ச. விசுவநாதபிள்ளை.
(Mis. 657)

இந்து சாதனம்
யாழ்ப்பாணம்:— குரோதன வரு
ஆடி மீ சஉ வியாழக்கிழமை.

## இனிச் செய்யவேண்டியதென்ன?

இங்குள்ளவர்கள் தங்கட்கு இன்றியமையா உணவுப்பொருள்களாயுள்ள அரிசி நெல் என்னும் இவைகளின்பொருட்டு அந்நிய நாட்டை நம்பியிருப்பதினால் வந்த - வருகிற வரக்கூடிய தீமைகளை முன்னர்ப்பன்முறை இப்பத்திரிகைவாயிலாக எடுத்துக் கூறியுள்ளோம். இவர்கள் இந்த விஷயத்தில்மாத்திரம் அலட்சியஞ் செய்கின்றார்களோ வென்று பார்த்தால், இதில்மாத்திரமன்று; இன்னுமோரு பிரதானமான விஷயத்திலும் பெரும் அலட்சியமாகவே இருக்கின்றார்கள். அந்நியநாட்டிலிருந்து இங்கு வரும் அரிசி நெல் முதலிய உணவுப்பொருள்களை அந்தந்த ஊர்களிலிருந்து இவர்கள் தாங்களே நேரில் வருவித்து வியாபாரஞ் செய்கின்றார்களோவென்றால் அதுவுமில்லையே. அரிசி நெல் கறிக்குரிய வெஞ்சனம் ஆகிய இவைகளையெல்லாம் இங்கே தருவிப்பவர்கள் நகரச் செட்டிப்பிள்ளைகளாகவன்றோ விருக்கின்றார்கள். இந்தியா இரங்கூன் முதலிய நாடுகளிலிருந்து அரிசி நெல் முதலிய பொருள்களைப் பெறுதற்கு நாங்கள் நகரத்தாரையே நம்பியிருக்கின்றோம். இப்படி நம்பியிருந்தமையினாற் சில சமயங்களில் அரிசி நெல் விலையேற அதனாற் பெரிதுஞ் சங்கடப்பட்டிருக்கின்றோம். ஆனால் அப்படி யெழுந்த சங்கடங்களை உடனே மறந்துவிடுகின்றோம். - இச் செட்டிப்பிள்ளைகள் வைத்து வியாபாரஞ் செய்யும் முதற்பணத்திற் பெரும்பாகம் இங்குள்ளாருடையதாகுமென்பது இப்பொழுது அறியத்தக்கதாகவிருக்கின்றது. யாம் முன்னொரு சந்தர்ப்பத்திற் கூறியபடி இங்குள்ளார் உண்ணாமல் உடுக்காமல் உலோபித்துச் சேர்த்து வைத்த அற்ப பணத்தைச் செட்டிப்பிள்ளைகளின் கடைகளிற் குறைந்த வட்டிக்குக் கொண்டுபோய் இட்டுவைத்துவிடுகின்றார்கள். நகரத்தார் அந்த முதலைக் கொண்டு அரிசி நெல் முதலிய உணவுப்பொருள்களை இங்கு தருவித்து அதிக லாபமேனும் கொஞ்ச லாபமேனும் வைத்து நம்மவர்களுக்கு வியாபாரஞ் செய்கின்றார்கள். நம்மவர்களிடத்திற் குறைந்த வட்டிக்கு வாங்கிய பணத்தைப் பின்னும் நம்மவர்களுக்கே கூடியவிகித வட்டிக்குக் கொடுக்கின்றார்கள். நம்மவருள் வியாபாரிமாரென் றிருப்பவர்கள் நகரத்தாரிடத்திலேயே பணத்தை வட்டிக்குப் பெற்றுப் பொருள்களை வாங்கியும் கடனுக்குப் பொருள்களை வாங்கியும் வியாபாரஞ்செய்து ஈற்றில் அதிக லாபமின்றிக் கஷ்டப்படுகின்றார்கள். இவற்றை யெல்லாம் யோசிக்கும்போது இந்தியாவிலிருந்து வந்திருக்கும் வியாபாரிமார் தங்கள் வியாபார முறையினால் இங்குள்ளாருடைய முதலைக் கொண்டே இங்குள்ளார்க்கு வியாபாரஞ் செய்து இலாபமுற இங்குள்ளார் எக்காலத்தும் அவர்களுடைய கையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்களென்பது நன்கு விளங்குகின்றது. இதனாற் செட்டிப்பிள்ளைகளும் இங்குள்ள மற்றும் இந்திய வியாபாரிமாரும் நீதியீனமாகப் பொருளை யீட்டுகின்றார்களென்று நாம் சொல்லவரவில்லை. அவர்கள் தங்களுடைய சிக்கனவினாலும் விடாமுயற்சியினாலும் வியாபாரமுறையை நன்கு உணர்ந்திருத்தலினாலும் அனுபவத்தினாலுமே வியாபாரஞ் செய்து பொருளை யீட்டுகின்றார்கள். இங்குள்ளார் தாங்களாகவே இந்த வியாபாரங்களை ஏன் செய்யவொண்ணாதென்பதே நாம் நிகழ்த்தும் ஆசங்கை. நம்மை ஆளுவது பிறர்; நமக்கு உணவுப்பொருள்களைத் தருவிப்பது பிறர்; நமக்காகிய உடையை ஆக்கித் தருவது பிறர்; நமக்குக் கல்வியூட்டுவது பிறர்; நம்மை வேலைகொள்வது பிறர்; உலக வாழ்க்கைக்கு வேண்டிய சகல பொருள்களையும் ஆக்கிக் கொண்டு வந்து விற்று எங்களிடத்துப் பணம் வாங்கிச் செல்வது பிறர்; காலிருந்தும் எங்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இழுத்துக் கொண்டுபோய் விடுவதுதானும் பிறர். இப்படியெல்லாமிருப்பின் எங்கள் பொருட்டு, எங்கள் தேயத்தின்பொருட்டு நாங்களாகச் செய்துகொள்வது எது யோசித்துப் பார்ப்பின் சந்தானவிருத்தியொன்று மாத்திரம் நாங்களாகச் செய்துகொள்ளுகின்றோமென்று சொல்லலாகும். இன்னும் எவ்வளவு காலத்திற்கு நாங்கள் பிறரை நம்பிக்கொண்டு "நித்திய குழந்தை" களாக இருத்தல் முடியும். இப்படிப் பிறரை நம்பியிருப்போமானால் நாங்கள் கீழே கீழே போய் ஈற்றில் மாள்வதன்றி எக்காலத்திலும் மேற்பட முடியுமா? ஒருபோதும் முடியாதே. இங்கிருந்து புறப்பட்டு நம்மவர்கள் சிங்களநாட்டிற் சென்று கடைவைத்துப் புகையிலையும் புகைச்சுருட்டும் விற்றுவிட்டால் மேற்பட்டுவிவோர்களா!

நீடித்தகாலமாகப் பிரபல வியாபாரம் நடத்திவந்த செட்டிப்பிள்ளை கடையொன்றிற் பணமுட்டு இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றதென்பது இங்குள்ளார் பலரறிந்த இரகசியமாம். இக்கடை முட்டுப்பட்டமையையிட்டு நாம் ஆறைகூறுதல் பொருந்தாது. வறியவர் செல்வராதலும் செல்வர்கள் வறியவராதலும் இயல்பாகும். வறுமையுஞ் செல்வமும் மானுடப்பிரயத்தனத்தால்மாத்திரம் ஆவனவல்ல. இவர்கள் இங்குள்ளார்க்குப் பெருந்தொகையான அரிசி நெல் மற்றும் பொருள்கள் எல்லாவற்றையும் இந்தியாவிலும் வேறு இடங்களிலுமிருந்து தங்கள் மரக்கலங்கள் வாயிலாக வேண்டியவண்ணந் தருவித்துவந்தார்கள். இனிமேலும் இவர்கள் இங்ஙனம் தருவிக்க வல்லரோவென்பது சந்தேகம். இப்படியே எவர்க்கும் வறுமையுஞ் செல்வமும் வருமென்பதை நாஞ் சிந்தித்து எங்கள் நாட்டிற்காகிய இன்றியமையாப் பொருள்களை நாங்களாகவே தருவித்து வியாபாரஞ் செய்துகொண்டாலென்னோ? சில வருடங்கட்கு முந்திப் பருத்தித்துறை வல்லுவெட்டித்துறை முதலிய இடங்களிலுள்ளவர்கள் தங்கள் மரக்கலங்கள் வாயிலாகத் தாங்களே இந்தியா பிரமதேசம் ஆதியாம் இடங்களிலிருந்து அரிசி நெல் முதலிய [illegible] தருவதை [illegible] செய்துவந்தார்கள். அவர்களுக்குப் பிற்காலத்தில் அவர்கள் பிள்ளைகள் ஆங்கிலம் படித்து உத்தியோகம் பாக்கப் புறப்பட்டு இந்தச் சீவாதாரமாக வுள்ள வியாபாரத்தை அலட்சியஞ் செய்யத் தலைப்பட்டனர். அதனால் இப்பொழுது அங்குள்ளவர்களும் அரிசி நெல் முதலியவற்றின்பொருட்டு இந்திய வியாபாரிமாரையே நம்பியிருக்கவேண்டியவர்களானார்கள்.

இப்பொழுது அரிசி நெல் முதலாம் உணவுப்பொருள்கள் விலை யேறுகின்றன வென ஒரு வதந்தி பிறக்கின்றது. செட்டிப்பிள்ளைகள் வேண்டிய அரிசி நெல் ஆதியாம் பொருள்களை இங்கே தருவியா தொழிவரேல் இவை விலை யேறுமென்பது மெய்யாம். இங்ஙனமானால் இனி நாம் செய்வதென்ன? இங்கே தனவந்தர்களென்றிருப்பவர் சிலர் தங்கள் பணங்கொண்டு வியாபாரஞ் செய்கின்றார்கள். என்ன வியாபாரஞ் செய்கின்றார்களென்று பார்ப்போம், சாராயக் குத்தகை கள்ளுக் குத்தகை முதலியவற்றிலே தம் பணத்தையிட்டு வியாபாரஞ் செய்ய முன்வருகின்றார்கள். க்குத்தகைகளை எதிருக்குக் கேட்டு விலையைக் கூட்டி ஈற்றில் தாங்கள் நஷ்டமடைவதுமுண்டு. இந்த விதமான வியாபாரங்களை விடுத்து இவற்றின்பொருட்டு இடும் பணத்தை அரிசி நெல் முதலியனவற்றி லிட்டு வியாபாரஞ் செய்வதனால் அதிக நன்மை யுண்டாகுமல்லவா? பணம் வைத்திருக்கும் நம்மவர்கள் இவற்றை நன்கு சிந்தித்தல்வேண்டும். சட்டநிரூபண சபை அங்கத்தவர் சனத்தலைவரென்றிருப்பவர்கள் இந்த விஷயங்களைச் சனங்களுக்கு நன்கு எடுத்துக் காட்டிப் படிப்பித்தல்வேண்டும். சனப்பிரதிநிதிகளாயுள்ளார் பிரதிநிதித்தெரிவுக்கு முந்தி யாதும் பொதுக்கூட்டங்கள் வைத்தனரென அறிந்துள்ளோமன்றி, பிரதிநிதிகளானபின் அப்படிப்பட்ட கூட்டங்கள் கூட்டியதாக யாம் கேள்விப்படவில்லையே. தோகைங்கரியம் சட்டநிரூபண சபை மண்டபத்தில்மாத்திரந்தானா செய்யத்தக்கது மற்றுமிடங்களிற் செய்தல் முடியாதா? பத்திரிகைகளென்று வெளிவருவன இவ்விஷயத்தைப்பற்றி நன்கு எடுத்துக் கூறுதல்வேண்டும். எங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய எந்தெந்தக் கருமங்களை நாமாகச் செய்தல் முடியுமோ, அவற்றைச் சிரமம்பாராது, நாமே முடிக்கப் பயின்றிருத்தலை விடுத்து அந்நியரை நம்பியிருந்தால் ஈற்றில் யாம் கஷ்டப்படவேண்டி வருமென்பது அனுபவத்திற் கண்டதாம்.

## சுந்தரமூர்த்திநாயனார் தடுத்தாட்கொள்ளப்பெற்றமை.

சிவபெருமானாகிய முதுமறையவர் திருவெண்ணெய்நல்லூரிலே வழக்குத் தொடரும்பொருட்டு முன்னே நடந்து சென்றார். திருமணப்பந்தரிலுள்ள ஆதிசைவப் பிராமணரும் ஏனையோரும் அங்கு நிகழ்ந்த அபூர்வ கருமத்தையிட்டுச் செய்வதறியாது தியங்கினார்கள். காந்தத்தைச் சமீபித்துள்ள இரும்பானது எத்துணை வேகமாக அக்காந்தத்தினால் இழுக்கப்படுமோ அத்துணை வேகத்துடன் நம்பியாரூரர் முதுமறையோரால் கவரப்பட்டார். அவர் அதிவிரைவாக அவ்வந்தணரைப் பின்றொடர்ந்து சென்றார். அங்குள்ளாரும் இந்த நூதன வழக்குவிசாரணையைப் பார்க்கும்பொருட்டு அவர்பின் போயினர். நம்பியாரூரர் எமது பரமபிதாவாகிய சிவபெருமானது பூரண கிருபாகடாட்சத்தைப் பெறுதற்குரியகாலம் அதிசமீபித்துவிட்டமையினால் அவரைப் பற்றியுள்ள வினைகள் திருவருள்வசத்தாற் கழன்றன. தலைமீது பெரும் பாரந் தாங்கிச் சென்ற ஒருவன் அதனைக் கீழே வைத்தபின் எவ்விதம் சுகமடைவானோ அதுபோன்று நம்பியாரூரரும் சிரமம் யாதுமின்றி விரைந்து சென்றுசென்பதாம். இது கண்ணப்ப நாயனார் காளத்திமலைமேல் ஏறும்போது "ஆவதென் விதனைக்கண்டிங் கணைதொறு மென்மேற்பாரம், போவதொன் றுளது போலும்" என்பதனாலும் புலப்படும். (இருவருக்கிடையில் எக்கருமம்பற்றியேனும் ஒரு வாதம் நிகழுமாயின் அதனைத் தீர்க்கும்பொருட்டு இருவரும் பஞ்சாயத்தெனப்படும் சபைக்குச் செல்வதே அக்கால முறையாகும். அவ்வழக்கிற் சம்பந்தப்பட்ட ஒருவர் மற்றவரை நோக்கி "எங்கள் வழக்கைப் பஞ்சாயத்திற் பேசி முடிவுசெய்துகொள்ளுவோம் அங்கு வருகுதி" எனக் கூறி அழைத்துச் செல்வர். திருநீலகண்டநாயனாருக்கும் சிவபெருமானுக்குமிடையில் திருவோடு காரணமாக நிகழ்ந்த வழக்குத் தில்லைச்சிதம்பரத்திலே தில்லைவாழந்தணர் சபையிற் பேசப்பெற்றமையும் பிறவும் இதற்குச் சான்றாகும். இக்காலத்தில் வழங்குவனபோன்று கோட்டார் அழைத்தபின் செல்வதும், அங்ஙனம் செல்லாது விருந்திற் பிடிபட்டுச் செல்வதும், அதுவுமின்றி அதிகாரிகளுடைய கையிற் சிக்காது ஓடி மறைதலும் பிறவும் அக்காலத்தில்லை.)

பெருங்கருணைத் தடங்கடலாகிய வேதியர்பெருமான் திருவெண்ணெய்நல்லூரிலுள்ள தெய்வப்பிராமணருடைய சபையை அடைந்தார். எதிரியாகிய நம்பியாரூரரும் அவருடைய ஞாதியரும் பிறரும் அங்குப் போய்ச் சேர்ந்தனர். பரம்பொருளாகிய மறையவர்திலகர் சபையோரைப் பார்த்து "அந்தணர் சிரேஷ்டரே! திருநாவலூரில் வசிப்பவனும் எனது மீளா அடிமையுமாகிய இந்த நம்பியாரூரன் என்னிடத்துள்ள அடிமைச் சீட்டைக் கிழித்துவிட்டான். இதுவே என் முறைப்பாடு" என்றார். இந்த மனுவைக் கேட்ட அந்தணர்கள் "பெரியவரே! அந்தணர் அடிமையாதலை இந்த உலகத்தில் நாம் என்றுங் கேட்டிலேம். உமது வழக்குச் சிறிதும் பொருத்தமுடையதன்று" என்றார்கள். "நான் இங்கே பொய்வழக்குப் பேசவில்லை; இந்த நம்பியாரூரனாற் கிழிக்கப்பட்ட அடிமையோலை இவனுடைய பாட்டனால் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது. இவனுடைய பாட்டன் மனம் வாக்குக் காயமொத்து எழுதிக் கொடுத்த அடிமைச்சீட்டை இவன் என்னிடமிருந்து அபகரித்துக் கிழிப்பதால்வெற்றியாகுமா" என்றும், தன்னுடைய வழக்கைச் சபையோர் அங்கீகரிக்கவேண்டு மென்றும் பழைய மறையவர் கூறி முடித்தார். அச்சபையிலுள்ள பெரியோர் எதிரியாகிய நம்பியாரூரரை நோக்கி "இவருடைய முறைப்பாட்டைப்பற்றி உமது கருத்து யாது" என்றார்கள். நம்பியாரூரர் சபையோரை நோக்கி "சகல சாஸ்திரங்களையும் அறிந்துள்ள பெரியோரே! நான் ஆதிசைவப் பிராமணனென்பதை நீங்கள் நன்கறிவீர்கள். அங்ஙனமாக இத்தக்கிழப்பிராமணர் உலகவழக்கத்துக்கு மாறாக நான் தமக்கு அடிமையென்பதைச் சாதிப்பாரேல் அதனை நிச்சயித்தல் மனத்தினாலும் வாக்கினாலும் அளவிடற்கரிய கருமமாகும். இதற்கு யான் ஏதும் சொல்ல வல்லேனல்லன்" என்றார். சபையோர் வழக்காடும் அந்தணரைப்பார்த்து "இந்த நம்பியாரூரன் உமக்கு அடிமையென்பதை அநுபவம் லிகிதம் சாட்சி என்னும் மூன்றில் ஒன்றினால் நீர் உறுதிப்படுத்தவேண்டும்" என்றார்கள். பழமறை முழுதருள் அந்தணர் "இவனுடைய பாட்டன் எழுதிக் கொடுத்த மூலவோலை என்னிடமிருக்கிறது. இந்த நம்பியாரூரன் என்னிடத்துள்ள மூலவோலையையுங் கிழியாத வண்ணம் நீங்கள் காத்துக்கொள்வீரேல், இப்பொழுது காட்டுகிறேன்" என்றனர். சபையோர் அதற்கிசைந்தார்கள். அந்தணர்பெருமான் மூலவோலையை எடுத்துக் கொடுத்தார். பக்கத்தில் நின்ற ஒருவர் அதனைக் கையிலேற்றுப் படித்தார். அது சுருட்டிக் கட்டப்பட்ட பழைய ஓலையாகவிருந்தது. "திருவெண்ணெய்நல்லூரிலிருக்கும் பித்தனாகிய பிராமணருக்குத் திருநாவலூரிலிருக்கும் ஆரூரனாகிய யானும் என் சந்ததியாரும் வழியடிமைத் தொண்டு செய்வதற்கு மனம் வாக்குக் காயமொத்து இந்த அடிமைச்சீட்டை எழுதிக் கொடுக்கின்றேன். இங்ஙனம், ஆரூரன்" என அதில் எழுதப்பட்டிருந்தது. ஆரூரனுடைய கையொப்பமும் சாட்சிக்காரருடைய கையொப்பமும்வேறு கையொப்பங்களுடன் ஒத்துப் பார்க்கப்பட்டன. சபையோர் அந்த அடிமைச்சீட்டு உண்மையானதெனத் தீர்மானித்தார்கள்.

சபையார் நம்பியாரூரரை நோக்கி, "இவ்வழக்குச் சம்பந்தமாக இங்கே காட்டப்பட்ட அடிமைச்சீட்டு உண்மையானதென உறுதிப்படுத்தப்பட்டது. உமது பாட்டனாருடைய வேறு கையொப்பமும் அடிமைச் சீட்டி லிடப்பட்ட கையொப்பமும் ஒத்திருக்கின்றன. நீர் இவ்வழக்கில் தோற்றீர். ஆகவே நீர் இன்றுமுதலாக இவ்வந்தணருக்கு மீளா அடிமையாகத் தொண்டு பூண்டு ஒழுகக்கடவீர்" எனத் தீர்ப்புக் கூறினர். நம்பியாரூரரும் எனது ஊழ்வினை இதுவாயின் நான் செய்வது வேறு யாதெனக் கூறி வழியடிமைத் தொண்டு செய்ய உடன்பட்டார்.

இங்ஙனம் இப்பெருவழக்கு விசாரணை செய்யப்பட்டு நிறைவேறிய பின் சபையோர் முதுமறையவரை நோக்கித் "தவசிரேஷ்டரே! இங்கே காட்டிய அடிமைப் பத்திரத்தில் நீர் திருவெண்ணெய்நல்லூரில் வசிப்பவரென்று எழுதப்பட்டிருக்கிறது. உம்மை நாம் இதுகாறும் அறிந்திலேம்; உமக்குத் தலைமுறையாய் உள்ள வீட்டையும் உமது சம்பத்துக்களையும் நீர் காட்டுதல்வேண்டும்" என்று கேட்டனர். வல்வழக்கிட்டு வெற்றி யெய்திய அருமறைமுதல்வர் "நீங்கள் எனது வாசஸ்தானத்தை இதுகாறும் அறியீர்கள் போலும்! என் பின் வாருங்கள், யான் காட்டுகின்றேன்" என்று கூறித் திருவருட்டுறை யென்னும் ஆலயத்தை நோக்கி நடந்தருளினர். எல்லோரும் பின் தொடர்ந்தார்கள். சிவபெருமானாகிய மறையவர் அவ்வாலயத்துட் புகுந்து மறைந்தருளினர். பின் தொடர்ந்து சென்ற நம்பியாரூரர் முதலாயினோர் அவரைக் காணாது திகைத்தார்கள். நம்பியாரூரர் அந்தணர்பெருமானைக் காணாது பசுவைப் பிரிந்த கன்றைப் போன்று வருந்தி வாய்விட்டுக் கதறினர். அவருடைய கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்தது. அப்பொழுது திருவருட்டுறை ஈசுவரர் பார்வதி சமேதராய் இடபாரூடராய்க் காட்சி கொடுத்தருளிச் "சுந்தரா! முன்னர் நீ ஆலாலசுந்தரனென்னும் நாமம் பூண்டு நமக்குத் தொண்டனாயிருந்தனை; அன்று அநிந்திதை கமலினி என்னும் இரு பெண்களையும் நீ விரும்பியமையினால் எமது ஆஞ்ஞைப்படி பூமியிற் பிறந்தனை; துன்பத்தைத் தருகின்ற உலகவாழ்க்கை உன்னைப் பற்றும் இத்தருணத்தில் நாமே வலிந்து வந்து மார்ச்சால சம்பந்தமாகத் தடுத்தாட்கொண்டேம்" என அருளிச்செய்தார். தமது பூர்வ உணர்ச்சியும் பூவுலகிலிழிந்தமைக்குக் காரணமும் அப்பொழுதே அவருக்குப் புலப்பட்டன. அவரது கரங்கள் தலைமேலேறிக் குவிந்தன. திருச்சிற்றம்பலத்தில் ஆனந்ததாண்டவம் செய்தருளும் குஞ்சிதபாத நடராசப்பெருமான் தம்மை இவ்வண்ணம் தடுத்தாட்கொண்டருளிய பெருங்கருணையை நினைந்து நெக்குநெக்குருகினார்; தம்மை மறந்து நின்றார்; பாடினார்; போற்றித் துதித்தார்; அந்தரதுந்துபி முதலாம் வாத்தியங்கள் ஒலித்தன; தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். வல்வழக்குப் பேசித் தடுத்தாட்கொண்டவராகிய சிவபெருமான் தமது தொண்டன்மீது கிருபா நோக்கஞ்செய்து "சுந்தரா! நீ எம்முடன் வன்மைபேசி வன்றொண்டனென்னும்பேர் பெற்றனை; அன்புடன் எமக்குச் செய்யப்படும் அருச்சனையிலும் மிகமேலானது பாடலேயாம். ஆதலால், நீ ஸ்தலங்கள் தோறுஞ்சென்று தேவாரப்பதிகம்பாடுதி" என அருளிச்செய்தார். இதனைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனார் "சுவாமீ, பிரபஞ்ச வாழ்க்கையிற் சிக்கிப் பேரிடர்ப்படாவண்ணம் தடுத்தாட்கொள்ளவேண்டித் தேவரீர் அந்தணர்வேடந் தாங்கி எழுந்தருளிய உண்மையை உணர்ந்துகொள்ளும் சத்தியற்ற அறிவிலியாகிய யான் தேவரீரது அநந்த கலியாண குணங்களைப் புகழ்ந்து

(ஐந்தாம் பக்கம் பார்க்குக.)

யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கம்.

பட்டின பரிபாலன சங்கத்தின்

எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக

ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை

(மாமாத்தம்பி)யைத்

தயவுசெய்து

தெரிவு செய்யுங்கள்.

(Q 66)


ஆடி மாசத்து விசேஷதினங்கள்.

1உ (16 7-25) வியாழன், ஆடிப்பெருநாள்
3உ (18 7 25) சனிப்பிரதோஷம்
4உ (19 7-25) ஞாயிறு, மாவிட்டபுரம் இரதோற்சவம்
5உ (20 7-25) திங்கள், ஆடியமாவாசை கீரிமலைத் தீர்த்தம்
8உ (23 7-25) வியாழன், வண்-வைத்தீஸ்வர வயம்மை, நல்லூர் கைலைநாயகியம்மை, புலோலி பருவதவர்த்தனியம்மை, வல்லைத் தையல்நாயகியம்மை இரதோற்சவம்
9உ (24-7-25) வெள்ளி, ஆடிப்பூரம், வைத்தீஸ்வர தீர்த்தோற்சவம் சதுர்த்திவிரதம்
11உ (26-7-25) ஞாயிறு, நல்லைக்கந்தசுவாமி கோவில், அச்சுவேலிப்பிள்ளையார்கோவில், தீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார்கோவில், வட்டுக்கோட்டை கண்ணலிங்கேசுவரர் கோவில், வேலணைப் பெருங்குள முத்துமாரியம்மை கோவில், அனலைதீவு ஐயனார்கோவில், புத்தளம் சேனைக்குடியிருப்பு உற்சவாரம்பம்
12உ (27-7-25) திங்கள், பெருமிழலைக்குறும்ப நாயனார் குருபூசை
13உ (28-7-25) செவ்வாய், சுந்தரமூர்த்திநாயனார், சேரமான் பெருமாள் நாயனார் குருபூசை
16உ (31-7-25) வெள்ளி, கலியநாயனார், கோட்புலிநாயனார் குருபூசை
18உ (2-8-25) ஞாயிறு, பிரதோஷவிரதம்
20உ (4-8-25) செவ்வாய், பூரணைவிரதம், சந்திரகிரகணம், கதிர்காமம் தீர்த்தோற்சவம், திரிகோணமலையில் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் உற்சவாரம்பம்
27உ (11-8-25) செவ்வாய், திருச்செந்தூர் உற்சவாரம்பம்
28உ (12 8-25) புதன், கார்த்திகைவிரதம், மூர்த்திநாயனார், புகழ்ச்சோழநாயனார் குருபூசை
29உ (13 8-25) வியாழன், மட்டக்களப்புமண்டூர்க்கந்தசுவாமி உற்சவாரம்பம்
31உ (15 8-25) சனி, கூற்றுவநாயனார் குருபூசை

## திரிகோணமாமலைச் சைவ விதாலயங்களும் சற் பிரசங்கமும்.

நிகழும் ஆனிமீ 21உ (4-7-25) சனிக்கிழமை இரவு ஆறரைமணி தொடக்கம் ஸ்ரீ சண்முகவித்தியாலயத்தில் ஸ்ரீமத் விபுலாநந்த சுவாமிகளால் வரவழைக்கப்பட்ட இராமநாதவித்யாலயத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதியாரவர்களால் இராமாயணப் பிரசங்கம் செய்யப்பட்டது. பெருந் தொகையான ஆண்பாலாரும் பெண்பாலாரும் குழுமியிருந்தனர். பாரதிகள் சொற்சுவை பொருட்சுவை நிறைந்த பிரசங்கம் இத்திருநகரவாசிகட்கு அதிக ஆனந்தத்தைக் கொடுத்தது. சுவாமிகளும் பாரதியாரவர்கள் பிரசங்கத்தை மெய்ச்சிச் சிறு சொற்பொழிவு நிகழ்த்தினர். அன்றைதினம் தொடக்கம் ஏழுவாரம் முதலாக இத திருநகரச் சைவப் பெண்பிள்ளைகளுக்காகச் சமயபாட வகுப்பு ஒன்று இவ்வித்தியாலயத்தில் காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரையும் நடைபெறவும், சைவ ஆண்பிள்ளைகளுக்காகக் கோணேசுவர வித்தியாலயத்தில் அதேநேரத்தில் நடைபெறவுந் தக்க ஒழுங்கு செய்வது தமது விருப்பமென்றும், பெண்பிள்ளைகளுடைய சமயபாட வகுப்புக்கு அவ்விதாலய ஆசிரியர்களுடன் "மாதர் ஐக்கிய சங்க"த்தின் அங்கத்தவர்களுஞ்சேர்ந்து உதவிசெய்து தளராவிடாதவண்ணம் நடத்துவார்களெனவும், ஆண்பிள்ளைகள் வகுப்புக்கு இத திருநகரத்து உத்தியோகம் வகுத்துவரும் அறிவாளிகள் பலர் அவ்விதாலய ஆசிரியர்களுடன்சேர்ந்து தளரவிடாது முன்னின்று நடத்துவார்களெனவும் சுவாமிகள் தமது சொற்பொழிவிற் கூறி முடித்தனர். மறுதினம் (5-7-25) கோணேஸ்வர வித்தியாலயத்தில் பாரதியாரவர்களால் "தக்ஷிண கைலாச மான்மியம்" என்னும் விஷயம் பிரசங்கஞ் செய்யப்பட்டது. சுவாமிகள் பாரதியாரவர்கள் சமுகத்திலேயே இருவிதாலயங்களிலும் சமயபாட வகுப்பை ஆரம்பித்தனர். அழக.

## இந்திய சமாசாரம்.

### பரிதானம்வாங்கிய தாசில்தார்.

சேலைச்சேர்ந்த ஜால்செயான் தாசில்தார் ஒருவர் பலமுறை பழுதானம் பெற்றுரென்றகுற்றம் சாட்டப்பட்டு இரண்டுவருடக் கடுஞ்சிறையும் 6000 ரூபா அபராதமும்விதிக்கப்பெற்றார்.

### டக்டர் அனிபெசன்ற்.

டக்டர் அனிபெசன்ற் சுயஆட்சி சம்பந்தமாகப் பிரசாரம் செய்யும்பொருட்டு இந்த ஜூலாய்மீ 4உ சீமைநாட்டுக்குப் புறப்பட்டிருக்கின்றனர். இந்நோக்கம் மகாத்மாகாந்தி தேசபந்துதாஸ் முதலியோரால் ஆதரிக்கப்படவில்லை.

### குவாலியா மகாராசாவின் ஞஸ்தி.

சிலவாரங்களுக்குமுன் பாரிஸ்பட்டினத்தில் இறந்தகுவாலியர் மகாராசாவின் ஞஸ்தி சென்றவெள்ளிக்கிழமை கப்பல்மார்க்கமாக இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது. அது சகல இராசவரிசைகளுடன் துறைமுகத்திலிருந்து குவாலியருக்குக் கொண்டுபோகப்பட்டுப் பரிசுத்தமுடைய கங்காநதியிலிடப்பட்டது.

### இந்திய கூலிச்சனங்களின் வேதனம்.

இவ்விஷயத்தின் பேரில் நிச்சயமும் திலவரமுமான ஓர் ஒழுங்கு செய்யப்படவேண்டுமென்று சென்னைத்துரைத்தனத்தார் சாதித்து நிற்கின்றனர். சென்றவாரத்திலே இதன் பேரில் சென்னைத்துரைத்தனர் உள்நாட்டு மந்திரியுடன் இலங்கை இமிக்கிறேஷன்பகுதித்தலைவரும் தோட்டத்துரைமார் பிரதிநிதியுங் கலந்து பேசிக்கொண்டனர். கூலிவிஷயத்துக்கு மாறுச் சொல்லப்பட்டவை ஒப்புக்கொள்ளப்பட்டனவாம்.

### சிறைச்சாலையில் எம் ஏ பரீட்சை.

அலிப்பூர்ச் சதியாலோசனை வழக்கிற் சிறைப்படுத்தப்பட்டு விடுதலைசெய்யப்பெறாதவரும் வங்காள ஆக்கிரமக்குற்றச்சட்டப்படி இப்பொழுது சிறைப்படுத்தப்பட்டிருப்பவருமாகிய சந்தோஷ்குமார் மித்ரா என்பவர் சிறைச்சாலையிலிருந்து எம். ஏ. பட்டத்துக்குப் பரீட்சிக்கப்படலாமெனக் கல்கத்தா பல்கலைக்கழகச்செனேற் சபையாரால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இவர் பல்கலைக்கழகமானவனென்ற முறையிற் பரீட்சிக்கப் படமாட்டார்.

### யானையைவிழுங்கின கள்வன்.

சென்ற வியாழக்கிழமை சென்னையில் தனுச்செட்டி என்னும் ஒருவன் ஒரு பெண்பிள்ளையின் பொற்சங்கிலியைத் திருடிவிழுங்கினன். பொலிசர் அவனைப்பிடித்துப் பரிசோதிக்கும் பொருட்டுவைத்தியசாலைக்குக் கொண்டுபோயினர். அவனுடையவயிற்றினுள் ஒருசங்கிலியிருப்பதாகக் காணப்பட்டது. பின்னரும் பரிசோதித்தபோது பொன்னுற் செய்யப்பட்ட ஒரு சிறு யானையும் அவனுடைய வயிற்றினுட் காணப்பட்டது. குறித்த கள்வன் இப்பொழுது வைத்தியசாலையிற் கிடக்கின்றான்.

## நாநா சமாசாரத் திரட்டு.

### பாலிபாஷைப் பழைய நூல்கள்

மட்டக்களப்பு டிஸ்திரிக்கோட்டு நீதிபதியாயிருந்து இங்கிலாந்துக்குச் சென்று இறந்துபோனவராகிய ஜெ. H நெவில் என்பவர் இலங்கையிலே இருந்த காலத்தில் பாலிபாஷையிலெழுதப்பட்ட அநேகம் பழைய நூல்களை ஆங்காங்குக்கண்டுபிடித்துச் சேர்த்துவைத்திருந்தனர் இங்கிலாந்துக்குச் செல்லும்போதும் அவைகளைக் கொண்டுபோயினர். அவர் இறந்தபோனபின் அவருடைய இனத்தவர்கள் அந்நூல்களை விரும்பும் இலங்கையார்க்கு விற்றுவிடத் தீர்மானித்திருக்கிறார்களாம். உ. தாரகை.

### சீனு தேசத்துக் கலகம்.

சீனுவிலுள்ளவர்கள் பிரித்தானிய சமுதாயங்களின தொடர்பைமுற்றாக நீக்கவேண்டுமென்றும், பிரித்தானியரால் வேலைகொள்ளப்பட்டிருக்கும் சீனர் தங்கள் வேலைகளை விட்டுவருதல் வேண்டுமென்றும் சீனவியாபாரசங்கம் தீர்மானித்திருக்கிறது. சகேயில் நிகழ்ந்த குழப்பங்காரணமாகச் சில நிபந்தனைகளைப் பிரித்தானியருடன் மாத்திரம் செய்துகொள்வதற்குச் சீனுமறுத்துவிட்டது. இதிற் சம்பந்தப்பட்ட எல்லாத்தத்துவ இராச்சியங்களுடனும் சேர்ந்து ஒழுங்குசெய்யவேண்டுமென அந்நியகட்சிக்காரர் அபிப்பிராயப்படுகின்றனர். சோவியத் ஆசாயவிமானங்கள் மூன்று ருசியாவிலிருந்து சீனுவுக்கு வந்துசேர்ந்தன. சீனுவிலுள்ள சட்டப்படைத் தலைவரும் புத்தமத்சிரிக்களின பிரதிநிதிகளும் இவைகளை நன்கவரவேற்று உபசரித்தார்கள். தொழிலாளர் வேலைசெய்யமறுத்துக் கூட்டங்கூட்டமாகத்திரிந்து தமது கட்சியின் தொகையை அதிகப்படுத்துகின்றனர்.

### சன்யாட்ஸன் கட்சிக்கு வேற்றி

ஷாங்ஹாயில் அந்நிய பகிஷ்காரங்களும் கப்பல் தொழில் நிறுத்தமும் நின்றபாடில்லையாயினும் மற்றப்படி அமைதியாக இருக்கிறது. கொல்லப்பட்டவர்களுடைய உறவினருக்கு அநுதாபங் காட்ட மாணுக்கர் கூட்டமொன்று நடந்தபோது தேசத்தின் உரிமைகளைப்பற்றிய அழுத்தமான மொழிகள் வெளியாயின. தண்ணீர் வசதிக்காக ஏற்பட்டிருக்கும் தொழிற்சாலைச் சேர்ந்த சிறுபோர்மன்களின் தலைவர் கொல்லப்பட்டார். கன்டோனில் ராணுவச் சட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஷாங்ஹாயில் நடந்த விஷயங்களைப்பற்றி அன்னிய இலாகா சம்பந்தமான உத்தியோகசாலையில் கவனித்து முடிக்க வேண்டுமென்று ஒருமுறை செய்துவிட்டுச் சீனுதேசப் பிரதிநிதிகள் மத்தியஸ்த மகாநாட்டினின்று விலகிக்கொண்டார்கள்.

கான்டன் நகரில் பதினுறுபேர் கொண்ட ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு தேசிய ஆட்சி நிர்வகிக்கப்படுகிறது. காலஞ்சென்ற சன்யாட்ஸெனது மகன் அதில் அங்கத்தினராக ஒரு மந்திரிஸ்தானம் வகித்து வருகிறார். சன்யாட்ஸெனது அரசியல் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது அவர்கள்கொள்ளவேண்டிய கொள்கை. இந்த அரசியல்ஆட்சிமுறை ஸ்தாபிக்கப்படுகையில் அரசாங்கத்தார் பிரிட்டிஷ் பிரஞ்சு கான்ஸல்களைத் தவிர மற்ற அன்னிய தேச கான்ஸல்களுக்குக் கடிதம் அனுப்பினுர்கள். எவரும் வரவில்லை.

ஷமீனில் பிரெஞ்சுக்காரர் வாசஸ்தலங்களில் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தபின்னர் அதற்கடுத்த மேடுகளில் சீனர்கள் உலாவக்கூடாதென்றும் பிரென்சு கான்ஸல்கேட்டபடி செய்ய முடியாதென்றும் சீனுதேச ஜனக்கூட்டத்தின்மீது பிரஞ்சுக்காரர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யாமல் பிரெஞ்சு அதிகாரிகளே கவனித்துக்கொள்ளவேண்டுமென்றும் சீனஅரசாங்கத்தார் தெரிவித்துவிட்டார்கள்.

### அமெரிக்க அபிப்பிராம்.

சீனுதேசத்தில் அந்நியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விசேஷ ஸ்தல உரிமைகளைப்பற்றி நன்றாக ஆராய்ந்து பார்க்க அமெரிக்க அரசாங்கம்விரும்புவதாகத் தெரிவிக்குமாறு புதிய அமெரிக்க மந்திரி மிஸ்டர் ஜான் மக்மரிக்கு விபரமாக உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. வாஷிங்டனில் நடைபெறப்போகும் யுத்த தளவாடங்களைப்பற்றிய மகாநாடு கூடும்போது இவ்விஷயத்திற்கும் சர்வதேச கமிஷன் கூடலாமென்று யோசிக்கிறார்கள். பிரிட்டிஷ் காமன் சபையில் இவ்விஷயத்தைச் சர்வதேச சங்கத்திற்கு விடுவதற்குப் பதில் சர்வதேச அங்கத்தினர் கொண்ட கமிஷனரிடம் விடுவது நல்லதென்று மிஸ்டர் ஆஸ்டன் சேம்பர்லேன் தெரிவித்திருக்கின்றார்.

ஹாங்கோவில் நடைபெற்ற காரியங்களுக்கு பிரிட்டிஷாரே பொறுப்பு என்று சீனுதேசத்தார்கள் நினைக்கவேண்டாமென்றும் பிரான்சு, இத்தலி, ஜப்பான் முதலிய எல்லாத் தேசங்களுக்காகவும் பிரிட்டிஷ் கடற்படை உத்தியோகஸ்தர் தற்காப்புச் செய்துகொள்ள நேர்ந்ததென்றும், அச்செய்கைகளைத் தாம் முழுவதும் ஆமோதிப்பதாகவும் அமெரிக்க வர்த்தக சேம்பர் சீனு வர்த்தக சேம்பருக்கு ஓர் அறிக்கை அனுப்பியிருக்கிறது. ஷாங்காயிலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகள் சார்பாக இங்கிலாந்திலுள்ள தொழிற்கட்சியினருக்கு ஷாங்காய் கலகத்திற்குக் காரணம் தொழிலாளரது நிலைமையல்லவென்றும் கம்மியூனிஸ்டு கட்சியினரின் காரியங்களேயென்றும் தந்திச்செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. ஹாங்ஹாயில் அந்நியருக்கு விரோதமாகச் சில காரியங்கள் நடைபெற்று வருவது ஓய்ந்தபாடில்லை. ஸ்வாடோவில் ஆங்கிலேயர்களது ஸ்டோர்களையும் ஜப்பானிய ஸ்டோர்களையும் கொள்ளையிட்டனர். பலமான காயம் எவருக்குங் கிடையாது.

### ருஷியாவின் நிலை.

தஸ்ஸார் தம்பதிகளைக் கைதுசெய்து ஷாங்ஹாயில் விசாரணை நடத்தவது பிழையென்றும் அவர்களிடங் காணப்பட்டதாகச் சொல்லப்பட்ட கம்மியூனிஸ்டு கடிதங்கள் போர்ஜரி செய்யப்பட்டவைகளென்றும் மாஸ்கோவில் பிரிட்டிஷ் ஸ்தானிபதிக்கு எம். சிச்சரன தெரிவித்தார்.

சீனு விஷயமாக ருஷிய அரசாங்கத்தாருக்கு எவ்வித அறிக்கையும் அனுப்பப்படவில்லையென்றும் நிலைமைக்குத் தக்கபடி காரியங்களைச் செய்யப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு முழுச் சுதந்திரம் விடவேண்டுமென்றும் மிஸ்டர் சேம்பர்லேன் காமன்ஸ் சபையில் ஒரு கேள்விக்குப் பதில் கூறும்போது தெரிவித்தார். ஹாங்காங்கில் ஆயுத தளவாடங்களைப்பற்றிய விதியின்படி கடுந்தண்டனை விதிக்க இரண்டு மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது பத்துவருஷம் வரையில் தண்டனை விதிக்கவும் சவுக்கடிகள் கொடுக்கவும் அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒழுங்கான வேலையின்றித்திரிபவர்களைப் பொலிசார் கைதுசெய்யவும் பொலீஸ் காப்டன் சூபரின்டென்டெண்டு அப்படிப்பட்டவரை உடனே வெளியேறச்செய்யவும் அதிகாரங் கொடுக்கப்பட்டு ஒரு விசேஷ கஜட்வெளியாகியிருக்கிறது இந்த அதிகாரங்களை உபயோகித்து ஹாங்காங்கில் நடவடிக்கை நடந்துவருகின்றது. ஹாங்காங் கப்பல் துறை வேலைகாரரும் டெலிகிராப் கம்பெனியிலுள்ள சீனுதேசத்து வேலைக்காரர்களும் தொழில் நிறுத்தஞ் செய்துவிட்டனர். ஏவசக்தி.

## கடிதம்.

### சற்போதமஞ்சரி.

(வண்ணை நகர்
ஸ்ரீ க வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது.)

### பாவையரிற் பதர்கள்.

(முற்றொடர்.)

மகிழ்நனே துணையென மகன்பின் வந்த
மருமக டன்னை மகள்போ லணைத்து
அன்போ டவளை யாதரி யாது
அடிமைப் பெண்போ லவமரி யாதையாய்
ஏசிப் பேசி யிரக்கமில் லாமல்
வம்புசெய கோடிய மாமியும் பதரே!
ஓதரும் புருஷனுன் டேஞ்சிய உணவை
அமிர்தமென் றெண்ணி யருந்தா ததனை
நாய்தழன் போடும் நாரியும் பதரே!
பெற்றோர் தமையன் பெரியோர் நாயகன்
இவர்வரி னுடனே யெழுந்தன் போடு
மரியாதை செய்யா வனிதையும் பதரே!
பூப்புறு காலைப் புருஷனுக் கெதிரே
சிரித்துமை யாடுஞ் சேட்டையும் பதரே!
தீநிலா விரதந் தீர்த்தயாத் திரையோடு
ஏதமில் நோன்பு இவைமுத லாகிய
நற்செயல் யாவும் நாயக னனுமதி
பெறதனுட் டிக்கும் பேதையும் பதரே!
ஆடவர் குழுமி யிருக்கு மவைகளில்
நாணமில் லாது நாட்டியப் பெண்போல்
அணிகல னொளிர ஆசன மிது
வைகிடும் அடங்கா மாரியும் பதரே!
பிள்ளைகள் கணவன் முதுமா தொருபெண்
இவர்களி லொருவர் துணையில் லாது
தனிவழி யேகுஞ் சழக்கியும் பதரே!
அருந்திறேர் தங்கள் அறிவைக் கெடுக்கும்
மதுபா னங்களை வைகலு மருந்தி
மயங்கிக் கிடக்கும் வம்பியும் பதரே!
நாயகன் ஊரில் இல்லா நாட்களில்
ஆடையா பரணம் அனைத்தையு மணிந்து
சிங்கா ரித்துத் தெருமுகப் பதனிற்
காத்துநிற் கின்ற கணிகையும் பதரே!
கூத்து விருந்து விழாக்கோண் டாட்டம்
இவைமுத லாகிய எண்ணிலா விநோத
ஆடல்செய் கின்ற கழகக் கவைப்
பார்க்கச் செல்லும் பாவையும் பதரே!
மாமன் மாமி மைத்துனர் ஞாதியர்
தங்க ளிடத்தினில் தலைவனுக் குள்ள
அன்பைத் தலையனை மந்திர மதனுற்
கெடுத்து வருந்துடி கேடியும் பதரே!
அரைப்பணம் பெறத அற்பகா ரியத்தில்
அயற்குடி யிருக்கும் அரிவையர் தம்மோடு
வம்புரை பேசி மயிர்பிடித் திழுத்துச் [ரே!
சண்டைசெய் பொல்லாத் தொவையும் பத
காதலன் குற்றங் கண்டு புடைத்தாற்
புத்திநே யாது பொறுமையோ டிராமற்
பாருளோர் நகைக்கப் பத்திர காளிபோல்
தற்கொலை செய்து சாகுவே னென்று
கழுத்தைத் திருகுங் கள்ளியும் பதரே!
அன்பனை நீங்க ளென்றழை யாமல்
தலையில் அடித்தது போற்றயை யின்றி
எந்த நேரமும் இறுமாப் போடு
நீயென் றழைக்கும் நீலியும் பதரே!

### பிரதி தேசாதிபதி அவர்கள் இந்தமீ 20உ வெள்ளிக்கிழமை (3—7—25) சட்டநிருபணசபையிற்சோல்லியவை

[இலங்கை டெயிலிநியூஸ் என்னும் பத்திரிகையிலிருந்து ஒருவரால் மொழிபெயர்க்கப்பட்டது.]

சட்ட நிருபணசபைக்
கௌரவ அங்கத்தவர்களே,

இதற்குமுந்திய காலங்களில் சட்டநிருபண சபை அங்கத்தவர்களின்முன் இத்தேசகாரியங்களின் நிலையைப்பற்றித்தம் அபிப்பிராயத்தைக் கொடுப்பது தேசாதிபதிகளின் வழக்கமாயிருந்தது. புதிய ஒழுங்குகளின்பின் தேசாதிபதிகளின் வழக்கமென்னவாயிருக்குமோ வென்பதைப்பற்றி எனக்குத்தெரியாது. ஆனால் பழையவழக்கத்தைக் கைவிடாது நடத்துவது நல்லதென்பது என் எண்ணம். அதற்காகிய காலம் வரவுசெலவுத்திட்டத்தைப்பற்றி வாதாடுஞ் சமையமே என்பதும் என் எண்ணம். வரவு செலவுத்திட்டத்திலேயே அரசாங்கத்தினுடைய பலகருமங்களுக்கும்வேண்டியவழிகள் ஒழுங்கு பண்ணப் படவேண்டும். ஆகையால் வரவுசெலவுத் திட்டத்தைப்பற்றி யோசிக்குமுன் இந்நாட்டின் முக்கிய தேவைகளையும் அவை ஒவ்வொன்றின் அவசியத்தைப்பற்றியும் அறிய முயற்சித்தல் வேண்டும். இச்சபையில் வரவுசெலவுத் திட்டத்தைப் பற்றிய விவாதமும் தெரியப்பட்ட அங்கத்தினரின் பரிசோதனையும் சவிஸ்தாரமான காரியம். இவ்வளவு

ஆழமாகப்போஷமுள் சிறியவும் பெரியவுமான கஷ்டங்களாகிய பல நிலைகளடங்கிய கடலில் கப்பலோட்டுதற்கு வழிகாட்டி நட்சத்திரத்திற்கு ஒப்பிடத்தக்க சிலமூலாதாரங்களை அற்பகாரியங்கள் முக்கியகாரியங்களை மறைக்கும்பொழுது உதவிக்கு சேர்க்கும் பொருட்டு உண்டாக்கல் வேண்டும்.

பரிபாலன விஷயங்கள் எல்லாவற்றிலும் முதலாயதும் முக்கியமானதும் மனுஷசமயபக்தமானதே. அரசாத பரிபாலனத்தின் நோக்கம் தமது பிரசைகளாகிய ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் முதலியவைகள் நன்மையை அடைவதும் தமது நாடெங்கும் சந்தோஷமாகவும் சுகமாகவும் தழைத்தோங்கும் குடிகளை உண்டாக்குவமே. அதை அடைந்தால் எல்லாவற்றையும் அடைந்ததற்குச்சரி. நமக்குமுன் வரும் ஒவ்வொருகாரியத்தையும் அது இவ்வழகிய தீவிலுள்ளோருடைய சுகம், சந்தோஷம், நன்மை முதலியவற்றை அடையக்கூடிய வழியைக்காட்டுமெனவோ அல்லவோ என்பதைக் கொண்டே தீர்மானிக்கவேண்டும். அப்படிப் பட்ட வழியால் யோசிக்குமிடத்தில் சிலமுக்கிய காரியங்கள் கவனிக்கப்படல்வேண்டும். அவையாவன:—இலங்கையின் பரப்பு 25,332 சதுரமைல் அதாவது ஒல்லாந்துதேசத்திலும் கிட்டத்தட்ட இருமடங்கு பெரியது. பெல்ஜியத்திலும் இருமடங்குக்குமேல் பெரியது. இங்கிலாந்திலும் அரைவாசியளவுள்ளது. இலங்கையின் சனத்தொகையோ 1921-ம் ஆண்டு மதித்தபடி 4,498,600 பேரைக் கொண்டது. இதிலிருந்து பார்க்குமளவில் இலங்கையில் சராசரி 1 மைலுக்கு 178 ஆட்கள். ஆனால் இங்கிலாந்தில் 702-ம், பெல்ஜியத்தில் 665-ம், ஒல்லாந்தில் 559-மாக இருக்கின்றன. இதிலிருந்து இலங்கையின் சனத்தொகை நன்றாய்ப் பெருக இடமுண்டென்று தெரியவருகின்றது. இப்பொழுது காடாயிருக்கும் நாடுகளைக் குடியேற்றம் சேர்க்கமாகத் தொடங்கப்படும் ஒவ்வொரு வழியிலும் எங்களுடைய கவனத்தை அதிகஞ் செலுத்தவேண்டும். இப்பொழுது இலங்கையில் சனங்கள் குடியேறியிருக்கும் விதம் நல்லதன்று. மற்றெல்லா மாகாணங்களின் சிறியதும் இலங்கையின் விஸ்தாரத்திலும் 1½ ஆகிய மேல்மாகாணம் இலங்கையின் ⅕ பங்கு சனங்களை உடையது. அதனுடைய சராசரி சனத்தொகை ஒரு மைலுக்கு 871. ஆனால் வடமத்தியமாகாணமோ இலங்கையின் எல்லாமாகாணங்களிலும் விஸ்தாரத்திற் பெரிது. ஆனால் அதனுடைய சராசரி சனத்தொகையோ ஒருமைலுக்கு 24. வடமத்திய, கிழ், ஊவா மாகாணங்களைச் சேர்த்தால் இலங்கையின் அரைப்பகுதி விஸ்தாரத்திற்குச்சரி ஆனால் சராசரிச் சனத்தொகையோ 48. இதிலிருந்து இலங்கையின் சிலபாகங்கள் விசேஷமாக மேல்மாகாணம் குடிசனத்தில் நெருக்கமாக விருக்கச் சிலபகுதிகள் மிகவும் நெருக்கமில்லாமல் இருக்கின்றன. ஆகையால் எங்களுடைய நோக்கங்கள் எல்லாவற்றிலும் சனங்களை இன்னுஞ் சமமாக விருக்கப்பண்ணலைப்பற்றிய எண்ணம் இருத்தல்வேண்டும். இதை எப்படிச்செய்யலாம்.

முதலாவதாக மிகவும் கீழ்நிலையில் இருக்கும் பாகங்களை போக்குவரவுக்கு வசதியாகவும் குடியேறுவோரை மோகம் பண்ணத்தக்கபடியாகவும் உண்டாக்குவதே. இப்படி நோக்கில் மகோவிலிருந்து வடமத்தியமாகாணத்துக்கூடாக திரிகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் போடப்படும் இருப்புப்பாதை ஆவசியகமானதே. மட்டக்களப்பிலிருந்து திருக்கோவிலுக்கு இருப்புப்பாதை போடும்படி கேட்பதும் நல்ல கேள்வியே. வடமத்திய மாகாணத்திலும் கிழ்மாகாணத்திலும் பாதைகளைப்பற்றி, அதிலும் விசேஷமாக புதிய இருப்புப்பாதை அமைப்பதற்கு உதவியாயிருக்கத்தக்கவைகளைப்பற்றிக் கவனம் செலுத்தல் வேண்டும். மனுஷ அன்பல்லாவிட்டாலும் முயற்சி ஆதாய எண்ணமாவது இப்படிப்பட்ட காரியங்களில் இச்சபையை ஊக்கப்படுத்தல் வேண்டும். ஏனெனில் 20½ இலக்ஷம் ரூபாவரையில் மட்டக்களப்பு, திரிகோணமலை முதலியவற்றிற்கு இருப்புப்பாதை போடுவதிற் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதில் ஆட்களின் போக்கு வரத்தும் சாமான்களின் ஏற்றுமதி இறக்குமதியும் கூடப்பண்ணினாற்றான் இதன் வட்டி உழைக்கப்படும். ஆனால், வடமத்திய, கிழ், ஊவா மாகாணங்களில், குடியில்லா இடங்களில் குடியேறுஞ் சனங்கள் சுகமாகவும் மேலோங்கி வாழவுந் தக்க வசதி சொற்பமேனும் இல்லாமலிருக்கும்பொழுது அவர்களைத் தூண்டுவது நன்றன்று. இக்காரியத்தில் காட்டுச் சுரக்ஷணசங்கத்திலிருந்தும், வைத்திய சுகாதாரப் பகுதியாரிடமிருந்தும் நீர்ப்பாய்ச்சல், கிருஷிகப்பகுதியாரிடமிருந்தும் உதவியை எதிர்பார்க்கிறேன். இச்சபையிலுள்ளவர்கள், கீழ் நிலையில் இருக்கும் இடங்களிற் சுகத்தையும், கிருஷிகர்மத்தையும் மேனிலைக்குக் கொண்டுவருவதற்கான எவ்வித வழியையும் மேற்கூறியவர்கள் கொண்டு வரும்பொழுது இச்சபை அதை ஆதரிக்குமென்று நிச்சயமாயிருக்கின்றேன்.

ஆனால் சுகத்தையும் கிருஷிகத்தையும் பற்றிய முதற்கடமை மிகவும் நெருங்கிய இடங்களுக்கும் நெடுங்காலமாயிருக்கும் கிருஷிகைத்தொழில்களுக்குமே யுரியது. ஆகையால் கொழும்பு நகரசபையார் இச்சபையினுடைய உதவியோடு கீழ் நிலையிலிருக்கும் பகுதிகளை நன்னிலைக்குக் கொண்டுவருதற்கு முயற்சிப்பது எனக்கு மிகவுஞ் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. மெல்ல மெல்ல அரசாங்க உத்தியோகத்தருக்கும் நகரசபைத் தொழிலாளருக்கும் வீடு அவரவர்களே கொடுக்க முயற்சிப்பாரென்றும் கெட்ட நிலையிலுள்ள வீடுகளை நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்று வீட்டுச் சொந்தக்காரருக்கு வற்புறுத்தப்படுமென்றும் மற்றுந்தொழிலாளரை உடையோரும் அவரவரே வீடு கொடுப்பாரென்றும் நம்புகிறேன். இப்பொழுது வீடுகளையும் நகரங்களையும் நன்னிலைக்குக் கொண்டுவருதலைப்பற்றி (9-ம் இல. 1915-ம் ஆண்டுக் கட்டளைச்சட்டம் இருக்கின்றது. அதை ஆட்சிக்குக் கொண்டுவரவேண்டும்.

மேலும் சுகத்தை நன்னிலைப்படுத்தக் கூடிய வழியாகவும் சன நெருக்கத்தைக் குறைத்தற்கும் ஏதுவாயிருக்கத்தக்கதாகிய கொழும்புத் தென்பகுதியை வெள்ளத்தினின்றுங் காப்பாற்றுதற்காகிய முயற்சியை நான் சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். அது மதிக்கப்பட்ட காலத்துள்ளும் செலவிலும் முடிக்கப்பட்டுவிட்டது. அது அம்முயற்சியை உண்டாக்கிய வரும் மேற்பார்த்தவருமாகிய, மிஸ்ரர் எவி. எவி. கார்வாட் அவர்களது திறமையைக் காட்டுகிறது. அப்படியே வடபகுதியிலும் சித்தி யெய்யக்கடவர். இப்படிக் கொழும்பு நகர் வெள்ள அபாயத்தினின்றும் நீக்கப்பட்ட பின் இதற்குக் கிட்டவுள்ள களனி கங்கைக்கு வடபகுதியிலுள்ளனவும், முத்துராஜவேலாவிலும் காஹுபாவிலும், தெற்குப் பொல்கொடையிலும் உள்ள இடங்களையும் வெள்ள அழிவினின்றும் நீங்க வழி தேடப்படும் என்று நினைக்கிறேன்.

நோய் மாற்றுவது அதைச் சொற்ப விகிதத்தில் வராமற் பண்ணினாலும், அதை அடியோடு வராமற்பண்ண முயற்சிப்பது வந்தபின் மாற்றுவதிலும் நன்று. சனங்கள் சுகமில்லாமலிருந்தற்சேற்ற வழிகளைப் போக்காவிடின், எவ்வளவு வைத்தியசாலைகளைக் கட்டினாலும் அவை எப்போதும் நிரம்பியும், சிலவேளை சனங்கள் கூடியுமிருக்க நேரிடும். இதற்குமுன் இந்நாட்டின் வைத்தியச் செலவுக்காக வைக்கப்பட்ட பணம் அதிகமாகக் கட்டடங்களிலும், அதற்சேற்ற ஆட்களை வைப்பதிலுமே செலவழிக்கப்பட்டது. இனி இவைகளை நன்னிலையில் வைத்திருப்பதோடு கூடிய வளவு காட்டுச் சுரத்தைப் போக்கும் வழிகளிலும், சுகாதார விஷயத்திலும், பொதுவாக நோய்மாற்றுவதிலுமே பணத்தைச் செலுத்த வேண்டும்.

## அடைவுநகை விற்பனவு விளம்பம்.

———:O:———

1893-ம் ஆண்டின் 8-ம் இல. சக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் வண்ணமேற்கு செ. ர. லெட்சுமணச்செட்டியாரிடத்திலும் செ. ரா. ரு. நாகப்பசெட்டியாரிடத்திலும் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பிய டிை சட்டத்தின் 12 பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல | டை. | ரூபா. | ஊர் | பெயர் | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|---|
| 1922-ம் ஆ. ஆகஸ்டு மீ. | | | | | |
| 745 | 20 | 500 | குசவன்குளம் | வேலுப்பிள்ளை சோமசுந்தரம் | பொன் அஞ்சுசொண்டகாசு 69 அரைப்பவுண் 2 முழுப்பவுண் ஒன்றுகோர்த்த தபவுண் மாலை 1 |
| செப்டெம்பர் மீ. | | | | | |
| 788 | 6 | 175 | வண்மேற்கு | சரவணமுத்து வல்லிபுரம் | பொன் சாதா செட்டிப்பூ ஈனட்யல் 1 முழுப்பவுண் 1 அரைப்பவுண் 1 |
| 834 | 26 | 90 | ,, | ,, | பொன் பட்டணம் காப்புச்சோடி 1 |
| அக்டோபர் மீ. | | | | | |
| 856 | 5 | 70 | சுன்னாகம் | பிரஞ்சி சவுரி | பொன் சாதாக்கம்பிப்பூரானட்டியல் 1 கிரிக்கொப்பு சோடி 1 காட்டுக்கடுக்கன் சோடி 1 வெள்ளியிற் பொனபோட்ட கொண்டைப்பூ 2 |
| நவம்பர் மீ. | | | | | |
| 938 | 13 | 45 | ஆவரங்கால் | சபாபதிப்பிள்ளைகிருஷ்ணபிள்ளை | பொன் சாதாக்கம்பிப்பூரானட்டியல் 1 |
| 967 | 29 | 45 | தெல்லிப்பளை | சி. செல்லப்பா | பொன் பட்டைச் சிப்புக்கள் இணைத்த மோதிரம் சோடி 2 |
| டிசெம்பர் மீ. | | | | | |
| 993 | 22 | 65 | புத்தளம் | அந்தோனிப்பிள்ளை | பொன் பதைக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 994 | ,, | 75 | ,, | ,, | பொன் முகப்பில்லாத பூக்காப்புச்சோடி 1 |
| 995 | 23 | 55 | சுன்னாகம் | முருகேசர் நல்லையா | பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 1923-ம் ஆ. பிப்பிரவரி மீ. | | | | | |
| 1097 | 20 | 50 | தயில்வேஸ்டேசன் | J. சவுரிடஸ் சவுரிமுத்து | பொன் பழுது பட்டணம் காப்புச் சோடி 1 |
| 1924-ம் ஆ. ஜெனவரி மீ. | | | | | |
| 11 | 15 | 40 | பரங்கித்தெரு | வைரவனூர் காத்திகேசு | பொன் முழுப்பவுண் கோர்த்த செடிகாரச்சங்கிலி 1 |
| 17 | 23 | 331 50 | குசவன்குளம் | வேலுப்பிள்ளை சோமசுந்தரம் | பொன் அமெரிக்கன் அரைப்பவுண் டாலர் ஒன்றுடன் குண்டுச்சங்கிலி 1 பதைக்கத்துடன் குண்டுச்சங்கிலி 1 |
| பிப்பிரவரி மீ. | | | | | |
| 25 | 5 | 100 | குசவன்குளம் | வேலுப்பிள்ளை சபாபிள்ளை | பொன் கொலுசுக்காப்புச்சோடி 1 |
| 43 | 18 | 45 | மல்லாகம் | கயிலாசம் நாகலிங்கம் | பொன் திருமாணி இல்லாத கம்பிப்பூரானட்டியல் 1 |
| 62 | 27 | 40 | ,, | ,, | பொன் பழுது பட்டணம்காப்புச்சோடி 1 |
| மார்ச்சு மீ. | | | | | |
| 84 | 9 | 80 | உடுவில் | குமாரசாமி சண்முகம் | பொன் பட்டணம்காப்புச்சோடி 1 முத்துக்கட்டாத பதைக்கம் 1 |
| 92 | 11 | 110 | வண்கிழக்கு | செ. ரா. செ. செய்குமுகம்மது ராவுத்தர் | பொன் பீலிக்காப்புச் சோடி 1 தாலிச்சோடி 1 கல்தோடுசோடி 1 |
| 97 | 13 | 30 | ஆனைக்கோட்டை | தில்லையம்பலம் பருதப்பு | பொன் கல்வைத்த அமெரிக்கன்பவுண் டாலர் 1 |
| 108 | 18 | 15 | நல்லூர் | அருணாசலம் சின்னப்பா | கல்தோடு சோடி 1 |
| ஏப்பிரல் மீ. | | | | | |
| 133 | 1 | 20 | நவக்கிரி | சேனாதிராசா வல்லிபுரம் | பொன்கொடி 1 |
| 148 | 10 | 25 | வேலணைகிழக்கு | சுப்பிரமணியம் விநாசித்தம்பி | பொன் சிறு கொடி 1 இடத்திரதாயித்து 1 |
| 174 | 21 | 50 | அச்சுவேலி | தாமு கோபால் | பொன் டிப்பியுடன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 190 | 30 | 135 | தட்டாதெரு | முத்து செல்லைய | பொன் சாதாச்சங்கிலி [illegible] 2 |
| மேமீ. | | | | | |
| 225 | 14 | 40 | பரங்கித்தெரு | வயித்தியாப்பிள்ளை மாட்டின் | பொன் டிப்பியுடன் கம்பிப்பூரானட்டியல் 1 சிறுகல்தோடு சோடி 1 வெள்ளியிற் பொனபோட்ட கொண்டைப்பூ 1 |
| 229 | 15 | 65 | கரையூர் | குசை ஞானப்பிரகாசம் | பொன் அவைமாலை 1 |
| 234 | 17 | 70 | தெல்லிப்பழை | காசிப்பிள்ளை சுப்பையா | பொன் பதைக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 264 | 31 | 85 | சுண்டிக்குளி | கந்தர் சிற்றம்பலம் | பொன் தகைக்கொடி 1 |
| ஜூன் மீ. | | | | | |
| 286 | 9 | 50 | உடுவில் | குமாரசாமி சண்முகம் | பொன் பட்டணம்காப்புச் சோடி 1 |
| 298 | 11 | 35 | சோனகதெரு | சுல்த்தான் அப்துல்காதர் முகம்மது உசன்தம்பி | பொன் திருமாணி இல்லாத சவடிச்சோடி 1 |
| 305 | 12 | 35 | சுண்டிக்குளி | சின்னத்தம்பி செல்லையா | பொன் கிளாட்டியல் 1 |
| 317 | 18 | 70 | தாராகுளம் | செம்பர் வேலாயுதம் | பொன் பினைகோர்க்கியுடன் தாலிக்கொடி 1 |
| 353 | 26 | 190 | சுண்டிக்குளி | கந்தர் சரவணமுத்து | பொன் குண்டு இரண்டுடன் முரிச்சிக்குத்திசோடி 1 |
| ஜூலை மீ. | | | | | |
| 377 | 2 | 50 | கந்தர்மடம் | அருணாசலம் கிருஷ்ணர் | பொன் முகப்பில்லாத கொலுசுக்காப்புச்சோடி 1 |

விற்பனவு:—குரோதன வருஷ ஆடி மாதம் 5-ந் திகதி (20-7 25) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகைபிறர்க்கலாக மிகுதி டிை கடைத்திண்ணையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை வடையார்,
கெசிஸ்மேஸ்தர்.

(Mis 679.)

அநேக பரிசுகளும் தங்கமெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்று உலகப் பிரசித்தி அடைந்திருப்பதோடு 25-8-23-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் அண்டுமருந்துக் கண்காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட்கிளாஸ் (முதல்தர) தேவ ஔஷதங்களெனத் தங்க மெடலும் வைத்தியபதி என்ற பட்டமும் பெற்றவர்.

குஷ்டரோகிகளே!

நீங்கள் இனி இந்த நரக வேதனையில் அழுந்தாமல் மன உல்லாசமாக இருக்கலாம்.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

— நமது தாம்பிர பஸ்பத்தின் மகத்துவம்

நிராசெனக் கைவிடப்பட்ட அநேக குஷ்டரோகிகளை சௌக்கியப் படுத்தி விட்டது.

திமிருடன் உள்ள குஷ்டம், குறைநோய், தடிப்பு, அரிப்பு, கை கால் சுரணையற்று காது, மூக்கு, உதடு, கை கால் சுரவையுள்ள பெருநோய் உள்ளவர்களும் கண் சிவந்து வாய் மூக்கில் துர்வாசனை வீசும் மூக்கு அழுகிய அசாத்திய ரோகமுடையவர்களும் சரீரமே ரணமாகி விரல்கள் அழுகிப்போன ஆறாத ரணங்களும், வெள்ளை, வெட்டை, மொழிகளில் குலை, வீக்கம், வலி கை கால் குடைச்சல், கிரந்தி, கமைச்சல், மேகஊறல், பத்து, அரிகிரந்தி, தடிப்புமே நரம்பு பிடித்து கைகாலை முடக்கிவிடும் மேகவியாதிகளும், வெண்மேகம், செம்மேகம், கருமேகம் முதலிய சகலவித கர்ம வியாதிகளுக்கும்,

# நமது தாம்பிர பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

முப்புவினால் தளுக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாது. பத்தியமில்லை. வியாதிகளை விவரமாய் எழுதவும்.

80-வேளை பஸ்பம் ரூபா 40. 40-வேளை பஸ்பம் ரூபா 20.

20-வேளை ரூபா 10 ஏழைகள் என்று எழுதினால் பாதிவிலைக்கு அனுப்பப்படும்

காந்தி! தேஜஸ்!! பலம்! ! தீர்க்காயுள் சந்தானவிர்த்தி,

அடையப் பிரியப்படுகிறீர்களா! அப்படியானால் பழனி, T. R. K.

# தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள் (பஸ்பத்தின் மகிமை).

"முடியாத பற்பமது குன்றியுண்ண முனையான காயமது சிவந்து மின்னும்
பிடியாத மதயானைப் பெலனுக்கொக்கும் ..........."

என்ற இச்கவியால் பஸ்பத்தின் பெருமை நன்கு விளங்கும். அபார சக்தி வாய்ந்தது. ஜீரண சக்தி, பசி, ரத்தவிர்த்தி உண்டாக்கும் இந்திரிய விருத்தியும் இந்திரிய புஷ்டியும் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

100-நாள் பஸ்பம் ரூபா 35 50-நாள் பஸ்பம் ரூபா 20. 25-நாள் பஸ்பம் ரூபா 10, 10நாள் ரூ. 5.

## நீரழிவுக்கு ஆப்ரேக் செந்தூரம்.

சாஸ்திபோகும் நீரை நிறுத்தும், தாகத்தைக் குறைக்கும், நீரிலுள்ள சர்க்கரையையும்சரீர வெளுப்பையும் மாற்றி தேஜஸ் பலம் மாகடுக்கும். இதோ ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதி இந்தமருந்தில் திருவது வெகு ஆச்சரியமா இருக்கிறது. இப்படி சிரேஷ்டமான மருந்து இதுவரை வெளிவரவில்லை.

40-நாள் மருந்து ரு. 20, 20-நாளுக்கு ரு. 10 அனுமான அவரை கிருதம் 80 உருண்டை ரு. 10.

## தாளக பஸ்பம்.

எவ்வளவு நாட்பட்ட காசம்' க்ஷயம், ஈளை, இருமல், ஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு அவசியம் தீரும். புட்டி ரூபா 4.

## நாக பஸ்பம்.

கீழ் மூலம், ரத்தமூலம், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் வெகு சீக்கிரம் குணமாகும். ஆப்ரேஷன் தேவையில்லை புட்டி ரூபா 4.

## பிரமேக நிவாரணி.

ஒரேவேளையில் உங்கள் கஷ்டத்தை நிவிர்த்தி செய்யும், பொறுக்கமுடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தசிமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

## இதோ? ரசமணி.

பூசைக்குகந்தது வாசிதம்பிக்கும் சகல வசியம், தனலாபம், கீர்த்தி, நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிருத்தி, புத்திரசந்தானம், மென்மேலும் பெருகும், தொத்துநோய் அகமிருத்து மேகபற்று, சொரி சிரங்கு முதலியவை தீரும். மணி 1-க்கு ரூபா 2 6-மணி ரூபா 10-0-0.

எந்த மருந்துக்கு ஆர்டர் செய்தாலும் கடிதம் எழுதும்போது விவரமாய் நிரோக கூறுகளைத் தெரிவிக்கவும், பினங்கு, சிங்கப்பூர்த்தேசவாசிகள் முன்பணம் அனுப்பவும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

Q. 58 s)

எவ்விதமாகப் பாடுவேன்" என்று முறையிட்டார். அப்பொழுது "நாம் முன்னமே உனது விவாக மண்டபத்திற் புகுந்து உன்னைத் தடுத்தாட்கொள்ள வல்வழக்கிட்டபோது எம்மைப் 'பித்தன்' என்றே வசைமொழி கூறத்தொடங்கினை; இப்பொழுதும் அதனையேமுதலாகக்கொண்டு பாடக்கடவாய்" என அருளிச்செய்தார். சுந்தரமூர்த்திநாயனார் திருவருட் பெரும்பேறுபெற்று "பித்தாபிறைசூடீ" என்னும் சொற்றொடரை யுடைய தேவாரத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். நாயனார் முற்சென்மத்திலே சிவபிரானை மறந்து பெண்கள்பால் விருப்புற்ற அபராதத்தை நினைந்து இனி ஒருபோதும் சிவபெருமானை மறவாதிருப்பே னென்பதை முதலாவது பாடலில் "எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை" என்பதனாலும், மூன்றாவது பாடலில் "மன்னே மறவாதேநினைக்கின்றேன் மனத்துன்னை" என்பதனாலும் குறிப்பிட்டருளினார். திருவருட்டுறைநாதர் சுந்தரமூர்த்திநாயனாரைத் தடுத்தாட்கொண்டமை காரணமாகத் "தடுத்தாட்கொண்ட ஈசுவரர்" என்னுந் திருநாமமும் பெற்றார்.

## உலகம் பலவிதம்

"என்ன, பெரியண்ணே, எங்களோடு பேசவும் பிரியப்படுகின்றாயில்லை; ஏதும் மனஸ்தாபமோ" என்று நாவலப்பிட்டிப் புகைரதஸ்தானத்தில்நின்ற ஒரு புகைரத யந்திரத்தை அங்கிருந்து சனங்களை ஏற்றிச்செல்லும்படி வந்துநின்ற மோட்டர் "பஸ்" எனப்படும் பெரியமோட்டர்வண்டி வினவியது. "உங்களோடு எங்களுக்குக் கதையென்ன, நீங்கள் புறப்பட்டபின்புதானே, எங்களுக்குள்ள மரியாதை குறைந்துபோய்விட்டது; நெடுங்காலமாக இங்குள்ள சனங்களை ஏற்றிக்கொண்டு திரிந்த எங்களுடைய கௌரவத்தை, தெருக்கள்தோறும் நியதியின்றி ஓடத் தொடங்கி நீங்கள் கெடுத்துவிட்டீர்கள். இப்பொழுது இங்குள்ளார் எங்களை எள்ளளவும் மதிக்கின்றார்களில்லை, விரும்புகின்றார்களில்லை, தேடி வருகின்றார்களில்லை, நீங்களே வீட்டுக்குவீடு சென்று சனங்களை ஏற்றிக்கொண்டு திரிகின்றீர்கள்; ஆனால் உங்களை நம்பிச் சனங்கள் உங்கள்மீது ஏறிப் பிரயாணம் பண்ணுவது நாதனந்தான். உங்களுள் எத்தனைபேர் ஏற்றிக்கொண்டு சென்ற சனங்களுடன் இடைவழியிற் கவிழ்ந்து எதிர்சென்றவர்களுக்கும் அபாயம் விளைத்துவிடுகிறீர்களாமே" என்று புகைரத யந்திரவண்டி மோட்டர் பஸ்மீது குறை கூறியது.

* * *

"அண்ணே, அபாயங்கள் ஆருக்கும் வருவது உண்டு. நாங்கள் தெருவிலே இடைக்கிடை விழுந்து போகின்றோமென்று பரிகாசஞ் செய்கிறாய், இற்றைக்கு இரண்டுமூன்றுவருடங்களுக்கு முன் மதவாச்சியிலே உன்கள் பகுதியார் கவிழவில்லையா, புரளவில்லையா? முறியவில்லையா, உடையவில்லையா? சனங்களைச்சேதப் படுத்தவில்லையா? பின்பு கடுகணுவையில் மலைச் சரங்கத்துள் உங்களில் இருவர் ஒருவரோடொருவர் முட்டிப் பெருஞ்சேதம் விளைக்கவில்லையா? அண்ணே, அது ஏன், உங்களுக்கு உங்கள் குற்றம் தினைபோலவும் பிறர் குற்றம் பனைபோலவும் புலப்படுகின்றன. அரசன் வீட்டுக் கோழிமுட்டை குடியானவன்வீட்டு அம்மியையும் உடைக்குமென்று சொல்லுவார்கள். அதுபோல நீங்கள் இராசாவீட்டுப் பிள்ளைகள், உங்களுடன் யாரும் எதிர்த்து நிற்க முடியுமா, நீங்கள் குற்றஞ் செய்தாலும் உங்கள் முதலாளிமாருக்கு அது குணமாகத் தோன்றும், நாங்கள் ஒருவர் இருவரை மேலதிகமாக ஏற்றிக்கொண்டு போனாற் பொலிசர் எங்கள்மீது வியாச்சியந் தொடர்ந்து எங்களுக்கு அபராதம் விதிக்கச் செய்துவிடுவார்கள், நீங்கள்மாத்திரம் எத்தனை சனங்களையும் ஏற்றிக்கொண்டு செல்லலாம்; உங்களைக் கேட்பாரில்லை; உங்கள் அதிகாரிகள் பிரயாணிகள் மீது மிக்க அதிகாரஞ் செலுத்துகின்றார்கள். நாங்களோ பிரயாணிகளை மிகவும் ஆதரவோடுதான் நடத்திவருகின்றோம். பிரயாணிகளின் வசதிக்குத்தக்கபடி நடந்துகொள்ளுகிறோம், நீங்கள் அப்படிச் செய்யமாட்டீர்கள். யுத்தகாலத்தில் பிரயாணக் கிரயத்தை அதிகப்படுத்திக் கொண்டீர்கள். யுத்தம் முடிந்தும் எத்தனையோவருஷங்களாய்விட்டன, இற்றைவரையிற் புகைரதப் பிரயாணக் கிரயத்தைக் குறைப்பதற்கு நீங்கள் நினைக்கவில்லை. இப்பொழுது நாங்கள் புறப்பட, அதனால் உங்கள் வருவாய்குறைய, அதன் பின்பே பிரயாணச் செலவைக் குறைக்க உத்தேசிக்கின்றீர்கள். நீங்கள் மாத்திரமல்ல, கொழும்பிலே திராம்வண்டிகள்தாமும் இப்பொழுது ஒழுங்குக்குவந்துவிட்டன. இந்த நன்மைகளெல்லாம் சனங்களுக்கு எங்களாலேயே வந்தன. இப்பொழுதும் நாங்களில்லாவிட்டால் நீங்கள் பழையகுணங் கொண்டுவிடுவீர்கள். ஆதலாலே சனங்கள் உண்மையாக எங்களுக்கே கடமைப்பட்டவர்களாக விருத்தல் வேண்டும். நாங்கள் செய்துவரும் நன்றியை மறப்பாரேல் அவர்களுக்கே பின்னரும் பெருஞ் சங்கடம் ஏற்படும்" என்று மோட்டர் பஸ் பேசிக்கொண்டு நிற்கும்போது அதன் சாரதி வருதலும், அவனைக் கண்ட பஸ் அவ்வளவிலே தன்பேச்சை நிறுத்திக்கொண்டது.

* * *

பலவருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்துள்ள பெரிய நீதிஸ்தலத்தில் ஒரு ஐரோப்பிய நீதிபதி நீதாசனத்திலிருந்து வழக்கு விளங்கிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், காட்டுப்புறத்தில் வசிக்கும் ஒரு மனுஷன் தாழங்குடையொன்றைப் பிடித்துக்கொண்டு நீதிபதி காணத்தக்கதாகக் கோட்டு வாயிலுக்கு நேரே சென்றான். நீதிபதி அவனைக் கூப்பிட்டு "உன் குடையைச் சுருக்கிக்கொண்டுபோ" என்று கட்டளையிட அந்தமனுஷன் "அதனைச் சுருக்க முடியாது" எனலும் உடனே நீதிபதி கோட்டு நிந்தாட்சணை யென்னுங் குற்றத்தின்பேரில் கோட்டு விளக்கம் முடியும்வரையும் மறியல் விதித்தார். இதற்கிடையில் அங்குநின்ற கோட்டு முதலியாரும் மற்றும் தமிழ் உத்தியோகத்தர்களும் தாழங்குடையின் தன்மைகளை அவருக்குச் சொல்லி "இந்த மனுஷன் அதனைச் சுருக்க நினைத்தாலும் அது சுருங்கமாட்டாது" என்று சொன்னார்கள். உடனே நீதிபதி அந்த நாட்டுமனுஷனைக் குடையோடு விடுதலைசெய்தனர்.

* * *

தாழங்குடையைச் சுருக்கிக்கொண்டு போகும்படி சொன்ன ஐரோப்பிய நீதிபதியைப்போல இக்காலத்தும் எத்தனையோ உத்தியோகத்தர்கள் எங்கள் தேசத்தின் நிலைமையை அறியாதவர்களாகவிருக்கின்றார்கள். இங்ஙனமாகவும், எங்கள் பட்டினபரிபாலன சங்கத்தார் இங்குள்ள நிலங்களை மதிப்பிடுவதற்கு இங்குள்ள மதிப்பு உத்தியோகத்தர்கள் தக்கவரல்லரென நினைத்துப்போலும், கொழும்பிலுள்ள அரசாங்க மதிப்பு உத்தியோகத்தரை அதிக சிரமத்துடன் இங்கு அழைக்கப்போகின்றனரென அறியலானேம். இப்படிச் செய்வதனால் இச்சங்கத்தார் பெறும் பயன் யாதெனத் தெரியவில்லை. "பாம்பின்கால் பாம்பறியும்" என்றபடி இங்குள்ள உத்தியோகத்தர்கள் இங்குள்ள நிலங்களின் இயல்பையும் உண்மையான விலையையும் வருவாயையும் நன்கறிவர். இவர்கள் அறிந்திருப்பதுபோல் அந்நியர் அறிந்திருக்கமாட்டார்கள். புதிதாக வருபவர் யாழ்ப்பாணத்துள்ள நிலங்களினியல்பை யுணராது, நீர்வளம் பொருந்திய கொழும்பு முதலிய இடங்களிலுள்ள நிலங்கள்போல் இங்குள்ள நிலத்தையும் மதித்துவிடுவார்களென நிலம் புலம் வைத்திருப்பவர்கள் பெரிதும் பயப்படுகின்றார்கள். எங்கள் பட்டினபரிபாலன சங்கத்தார் கொழும்பிலிருந்து ஒருவரை யழைத்து மதிக்கச் செய்வதினாலே தங்கள்மீது சனங்களுக்குள்ள மதிப்புக் குறைந்துவிடுமென்பதை மறந்துவிட்டனர்போலும்.

### சிதம்பரம் அநாதசாலைச் சங்கம்.

இதற்குப் பொருள் உபகரித்தவர்கள்

| | ரூ. | ச. |
|---|---|---|
| இ சா. 35-ம் புத்தகம் 92-ம் இலக்கப் பத்திரிகையில் வெளிவந்ததொகை | 1569 | 70 |
| ஸ்ரீ வை. ஆ. அம்பலவாணபிள்ளை, அத்தியடி | 100 | 00 |
| " வ. விஜயரத்தினம், 2-ம் முறை | 25 | 00 |
| " ஆ. க. இளையதம்பி, இந்துக்கல்லூரி | 5 | 00 |
| " பொ. இராஜகோபால் மணியம், 5-ம், 6-ம் முறை | 10 | 00 |
| " K. பொன்னையா, வண்கிழக்கு 2-ம் முறை | 5 | 00 |
| " A. வேலுப்பிள்ளை, Labu | 12 | 00 |
| " V. ஐயம்பெருமாள், Tampin | 5 | 00 |
| " K. A. சிதம்பரப்பிள்ளை, அல்வாய் வடக்கு | 15 | 00 |
| " க. வேலுப்பிள்ளை, வண் கிழக்கு | 10 | 00 |
| ஆக. | 1769 | 70 |

வை. சி. சி. குமாரசுவாமி
தனாதிகாரி.

(Mis 681)

### சமாசாரம்.

**காலநிலை.**

குளிரோடு கூடிய கடுங்காற்று இராக்காலங்களில் அடிக்கின்றது. மழைக்கோலம் காணப்படுகின்றது. சென்ற இரவு மழை சிறிது தூறியது.

**கதிர்காம யாத்திரைகாரருக்குக் கிரயம் குறைந்த பிரயாணச்சீட்டு.**

கதிர்காமயாத்திரையின் பொருட்டுப் புகைரதமார்க்கமாகச் செல்லும் அடியார்களுக்கு இந்த ஆடி 5-உ (20-7-25) திங்கட்கிழமை தொடக்கம் ஆகஸ்டுமீ 2-ந் தேதி வரையுங் கிரயங் குறைந்த பிரயாணச் சீட்டுக் கொடுக்கப்படும்.

**இந்துக்கல்லூரிப் பாலர் பாடசாலை.**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் பிரத்தியேகமாகவுள்ள பாடசாலைச் சிறுவர்களின்பரீட்சை சென்றவாரம் நடைபெற்றுவிட்டது. இப்பாடசாலையில் தமிழ் முதல் மூன்று வகுப்புகளும் வைத்து நடத்தப்படுவதுடன் இச்சிறுவர்களுக்கு ஆங்கிலமும் பயிற்றப்படுகின்றது. இதிற் சேர விரும்பும் பிள்ளைகள் வந்து சேர்வதற்கு இதுவே தருணமென மேற்படி பாடசாலை முதல் உபாத்தியாயர் தெரிவிக்கின்றார்.

**"ரேலிபோன்" மூலமாகப் பேசுவதற்குக் கிரயம்.**

யாழ்ப்பாணத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையே "ரெலிபோன்" மூலமாக மூன்றுநிமிஷநேரம் பேசுவதற்குப் பதினைந்து சதம் கிரயமெனக் குறிக்கப்பட்டிருக்கிறது.

**சனப்பிரதிநிதிகள் வைத்தியசாலைகளைப் பார்வையிடல்.**

சட்டநிருபணசபைச் சனப் பிரதிநிதிகள் தமது பிரிவிலுள்ள வைத்தியசாலைகளைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனரென இலங்கை வைத்திய பகுதித் தலைவர் ஒரு சுற்றுநிருபம் விடுத்திருக்கின்றனர்.

**மயிலிட்டிதெற்குப் பாலர் ஞானோதயசங்கம்.**

இச்சங்கத்தின் விசேடகூட்டம் ஒன்று ஆனிமீ 29உ (12-7-25) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 8 மணியளவில் மயிலிட்டிதெற்குச் சைவமடத்தில் ஸ்ரீ சி. சுவாமிநாதன் பி. ஏ. அவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் நடைபெற்றது. அத்தருணம் இராமநாதன்கல்லூரி ஆசிரியருள் ஒருவராகிய ஸ்ரீ திரு சோமசுந்தரம் அவர்கள் "கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியரின்" திவ்விய சரித்திரத்தைப் பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கஞ்செய்தனர். பின்பு உப அக்கிராசனர் ஸ்ரீ அ. பொன்னையா உபாத்தியாயர் சிறுகுறிப்புரைகூறவே கூட்டம் 10 மணிவரையில் தேவார பாராயணத்துடன்முடிவுபெற்றது. கடித.

**நெற்செய்கைக்கு அரசினர் உதவி.**

எமது அரசினர் மட்டக்களப்புக்கும் அம்பாந்தோட்டைக்குமிடையிலே ஆயிரம் ஏக்கர் நிலத்தை நெற்செய்கைக்கு வளப்படுத்தியிருக்கின்றனர். அந்நிலம் குத்தகையின்றி ஊரவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படும்.

**தலைமை ஆசிரியரின் தற்கொலை.**

சென்ற ஞாயிற்றுக்கிழமை குருநாக்கலிலே புத்த ஆங்கில பாடசாலைத் தலைமை ஆசிரியராகிய மிஸ்ரர் பீ டபிள்யு சார்ல்ஸ் சில்வா என்பவர் தற்கொலை செய்யும் பொருட்டு, பாஞ்சாலையிலுள்ள கிணற்றினுட் குதித்தனர். பலர் அவரை மீட்க முயன்றும் தண்ணீர் அதிக ஆழமாயிருந்தமையினால் சித்திபெய்திலர்.

**உயர்ந்த உத்தியோகம்.**

இலங்கையிலே அளவைப் பகுதியில் உத்தியோகம் வகிப்பதற்கு உதவிச் சுப்பிரின்றெண்டன் பத்துப்பேர் வேண்டியிருக்கிறது. இதற்காக நான்கு இலங்கைவாசிகளையும் நான்கு ஐரோப்பியரையும் இப்பொழுது அளவைப்பகுதியிற் பயிற்றப்படும் இரண்டு உத்தியோகத்தரையும் தெரிவுசெய்வதற்கு அரசினர் நோக்கம் கொண்டிருக்கின்றனர்.

**மனைவியைப் படுகாயப்படுத்தியமை.**

ஆனைக்கோட்டையிலே மதியாஸ் பெஞ்சமின் என்னும் ஒருவர் தனது மனைவியைக் கத்தியினாற் குற்றிப் படுகாயப்படுத்திய வழக்கு இங்குள்ள டிஸ்திறிக்கோட்டில் விசாரணை செய்யப்பட்டு எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டனர். வழக்காளியாகிய பெஞ்சமினின் மனைவி தண்டனையைக் குறைக்கவேண்டுமென்று நீதிபதிக்கு மனுச்செய்தமையினால் நீதிபதி எதிரிக்கு ஆறு வாரக் கடுஞ்சிறை விதித்தனர்.

**"சேர்ச்"சிற் கலகம்.**

சிலாபத்திலேயுள்ள ஒரு "சேர்ச்சில்" "உவாடன்" ஒருவர் செபதுதுக்குரிய புத்தகத்தை வாசித்துக்கொண்டுநின்றபோது வேறொரு "உவாடன்" அப்புத்தகத்தைப் பறித்தார். இருவருக்குமிடையிற் கலகம் மூண்டது. பறிகொடுத்தவர் மற்றவர் முகத்தில் அடித்தார். இருவரும் 'சேர்ச்'சுக்கு வெளியே துரத்தப்பட்டனர். அங்கும் சமர்புரியத் தொடங்கித் தங்கள் கதிகளைக்கையில் எடுத்தார்கள். பின்னர் அங்கு ஆராதனை செய்வோரால் ஒருவாறு கலகம் சாந்தி செய்யப்பட்டது.

**அற்றிடியாக் கொலையைப்பற்றிய மறுவிசாரணை.**

சிலவாரங்களுக்குமுன் அற்றிடியாவிலே கிருஷ்ணன் என்னும் கூலியாள் ஒருவன் கொலைசெய்யப்பட்டா னென்றும், சாட்சிகளில்லாமையால் அவ்வழக்குப் பொலிஸ்கோட்டிற்றானே தள்ளப்பட்டதென்றும் முன்னரே தெரிவித்துள்ளேம். இதனால் இலங்கையிலுள்ள புதினப் பத்திரிகைகளும் பொதுசனங்களும் அதிக கிளர்ச்சிசெய்தன. இக்கொலையைப்பற்றிய மறுவிசாரணை இந்த ஜூலாய்மீ 20உ திங்கட்கிழமை கொழும்புப் பொலிஸ்கோட்டில் நடைபெறும்.

**திருடச் சென்று நித்திரையாய்க்கிடந்த கள்வன்.**

சென்ற வெள்ளிக்கிழமை இரவு குருநாக்கலிலே உவில்லியம் என்னும் ஒரு கள்வன் பிறக்ரர். சீ. பீ. மார்க்கஸ் என்பவருடைய வீட்டினுள் அங்குள்ளோர் கதவடைத்து நித்திரை செய்யுமுன் ஒருவரும் அறியாத பிரகாரம் புகுந்தான். எல்லோரும் கதவு பூட்டி நித்திரை செய்வதற்கு அதிக நேரமிருந்தமையினால அவன் அங்குள்ள அலுமாரிக்கும் சுவருக்குமிடையிலுள்ள சிறு வெளியிற் படுத்துச் சிறிது நேரத்துட் குறட்டையிடத் தொடங்கினான். கதவைப் பூட்டியபின் நித்திரை செய்யச் சென்ற மிஸ்ரர் மார்க்கஸ் குறட்டைச் சத்தங் கேட்டு விளக்குடன் சென்று எங்குந் தேடிப்பார்த்தபின் குறித்த உவில்லியம் கிடப்பதைக் கண்டார். அங்குள்ளாருடைய உதவியினால் கள்வனைப் பிடித்தபோது மிஸ்ரர் மார்க்கஸின் வேலைக்காரனாகிய உவில்லியமென்னு மொருவன் அந்த அறையிலுள்ள அலுமாரிக்குள் 2000 ரூபா இருப்பதாகவும், அதனை எடுப்பதற்காக அறைக்குட் புகுந்து இரவு ஒரு மணிவரைக்கும் பதுங்கியிருக்கும்படியும் சொன்னானென்றும் அவன் கூறினான். குறித்த கள்வன் மீது குருநாக்கல் பொலிஸ் கோட்டில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.


### விளம்பரம்.

இத்தாற் சகலருக்கும் அறிவிப்பது வண்ணார்பண்ணை கிழக்கு வேலுப்பிள்ளை வல்லிபுரமாகிய யான் வண்ணார்பண்ணை மேற்கு கிருஷ்ணர் கதிரேசபிள்ளைக்கு 1924-ம் ஆ ஆனி மீ 21-ந் உ நொத்தாரிஸ் க. சு. வீரவாகு முகதாவில் எழுதிக்கொடுத்த 14615-ம் இலக்கத்தைக் கொண்ட அற்றோணித்தத்துவத்தை இன்று தொடக்கம் அழிக்கிறேன்.

வே. வல்லிபுரம்.
யாழ்ப்பாணம், கந்தர்மடம்.
16-7-25.
(Mis. 680).


### கதிர்காம ஆடித்திருவிழா.

இவ்வாலயத்தின் வருடாந்த ஆடித்திருவிழா இவ்வருஷம் ஜூலாய் மீ 20 ந் உ தொடங்கி ஆகஸ்ட் மீ 4 ந் உ முடிவு பெறுமென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2 இத்திருவிழாவுக்குப் போகும் யாத்திரிகளுக்கு உத்தரவுச் சீட்டு (Pass) தேவையில்லை.

3. போதிய சாப்பாட்டுச் சாமான்கள் கதிர்காமத்தில் இருக்குமென்பது அசாத்தியம் யாத்திரிகள் தங்கள் சாப்பாட்டுச் சாமான்களைக் கொண்டுபோவது உத்தமம்.

4 1925-ம் ஆ வைகாசி மீ 22-ந் உ யின் "கெசற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட விதிகளை யாத்திரிகள் அனுசரிக்க வேண்டும்.

5. இத்திருவிழாவுக்குப் போகும் யாத்திரிகள் அறியவேண்டியது யாதெனில் மாட்டு வியாதி உண்டாகியிருப்பதால் அம்பாந்தோட்டையிலிருந்து கிஸ்ஸவுக்கும் வெள்ளவாயிலிருந்து வீரவிலைக்குமிடையில் உள்ள பாதைகள் மாட்டு வண்டிகள் போகக்கூடாதபடி அடைக்கப்பட்டிருக்கிறதென்பதாம்.

ஊவைமாகாண அரசாட்சி பாண்டர்.
13-7 1925.
(G. 524)

### அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ருத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

### தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்க மரங்கள். நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையி லுள்ளன. வேண்டிய மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை எற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
அ பி, வல்லுவெட்டித்துறை.

(H. 37)

## பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

### சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து

குளிர் (துலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்ரர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்ரர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது மற்றும் வைத்தியர்களினுல் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனுல் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள் ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills L'd ) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. Y 47

### "ஸ்ரான்டேர்ட்" கொழுக்கியோடுகள்: (Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரக்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றவது, இந்த வடஇலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்த ஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற நாலு வருடகாலமாக நாம் தருவித்துவிற்றுவருகின்றேம். இந்தநாலு வருடகாலத்தில் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன, மற்றும் ஓடுகளிலும்பார்க்க இவை சிறந்ததென்பதற்கு இந்த ஒரு நியாயமுமே போதிய சான்றாகும்.

S. வீரகத்திப்பிள்ளை,
சோல் ஏஜண்டு,
யாழ்ப்பாணம்

(H. 34.)

### புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் உத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

(Y. 39).

### சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுனபேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது விலாசம்தெரிவித்தால் பிரைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறேம்.

விலாசம்:
கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & சயிஷன் ஏஜண்டு,
குகை, சேலம், S I

தந்தி விலாசம்: வேணுகோபால், சேலம்

(H 32

யாழ்ப்பாணம்
### சைவபரிபாலனசபையாரால் பிரசுரஞ் செய்யப்பெற்ற புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | க௫ |
| இரண்டாம் பாலபாடம் ,, | க௫ |
| மூன்றும் பாலபாடம் ,, | ௨0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ௪0 |
| ஆரும் பாலபாடம் .... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி விளக்கத்துடன் | எ௫ |
| கிருட்டிணன் றாது, உரையுடன் | அ௫ |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கிலமொழிபெயர்ப்புடன்)... ... ... | க௨ |
| இலக்கண வினுவிடை... ... ... | க0 |
| நிகண்டு கக-வதும் க௨-வதும் ... | ௨௫ |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | ௨௫ |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் ... ... ... | க-௨௫ |
| றவ்காகிதம்... ... ... ... | க-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | க௨ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | க௨ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௬ |
| குமணசரித்திரம் ,, | ௬ |
| பஞ்சாத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) | க௫ |
| மறைசையந்தாதி ... ... ... | ௨0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரேனும் மனி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்து வண்ணார் பண்ணைத் தபாலாபீசிற் பேறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வீ. பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், பிறிற்றூனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தக சாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. சுல்த்தான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ்அண்டு மருந்துக்கண்காக்ஷியில் பஸ்ஸிளாஸ் (முதல்தர) தேவதுளஷதங்களெனத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்ற

உலகம் புகழ்வது




உள்ள நாளும் மறவாதது

சூலை, குஷ்டம், ரணம், மேகம் முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது.

பழனி, சி. எம். சாமி

## குரு தாம்ர பஸ்பம்.

முப்பூவினுல் சுருக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றுஞ்செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணந் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியந் தீரும். மறுமுறை வியாதி திரும்பி வராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதம்தப்பு, தடிப்புகள், கிரந்திகள், பத்துகள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுத்திரம், கண்டமாலை, சூலைநீர் முதலிய சகல கர்மவியாதிகளும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும்சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செயமேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்குங் கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூபா 40. 40 வேளை மருந்து ரூபா 20. 20 வேளை மருந்து ரூபா 10. ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஸ் பிரதியேகம்.

நற்சாட்சி.

தேகமெல்லாமிருந்த மேகபத்துகள் இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டன. கைகால் விரல்களிலிருந்த ஆறுத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. முகவசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K. பழனியாண்டிப்பிள்ளை, செருத்தூர், லால்குடி, திருச்சி.

தங்கள் தாமிரபஸ்பம் 64 வேளை சாப்பிடக் கொடுத்ததில் குஷ்ட ரோகம் குணமாயிற்று சரீரத்திலுள்ள மேக நோய்கள் நீங்கி பாதத்தில்மட்டும் கொஞ்சம் இருக்கிறது. முகதேஜஸ் உண்டாயிருக்கிறது. தவிர வேறு ஒருவருக்கு சூலைநோய் (பித்த குன்மம்) 6 வேளையில் குணமாயிற்று. இன்னும் 80 வேளை மருந்து வி. பி. யில் அனுப்பவும்.

சி. பி. நாராயணபிள்ளை, சப் போஸ்மாஸ்ரர், சர்ச்சில் ரோட், றங்கூன். 4-11-24.

## நிகரற்ற மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!
புதியபலத்தைக்காட்டும்!
ஒருமுறை பரீட்சிக்கவும்!

ஆச்சரியகுணமுள்ளது!
போனபலத்தை மீட்கும்!
அதை இன்றே பார்க்கவும்.

இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை, ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி உண்டாகும் வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.


120 குளிகை ரூபா 10 60 குளிகை ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2. வி. பி. சார்ஸ் வேறு.

திருச்சி கா. இ. மு. குப்ராம்ஸா 3-1-23-ல் எழுதுகிறர்:
தங்கள் மன்மத கோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் இரத்தத்தைச் சுத்திசெய்து நரம்புத் தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரியத்தையுங் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3 ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்

சித்த ஆயுள்வேத டாக்டர்,
C. மலையப்பசாமிப்பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி.

(Q. 64 B)

### தங்க மலாம் பூசிய ரிஸ்லெட் கெடியாரம்.



இந்த கெடியாரம் பார்வைக்கு பொன் கெடியாரம் போலவேதோற்றும். வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். சரியான டைம் காட்டக்கூடியது. வெகு காலம் நன்ருய் போகக்கூடியது.

பொன் கிள்ட் ரிஸ்லெட் கெடியாரமும் பொன் கிள்ட் ஸ்பிரிங் பட்டையுடன் 6-8-0.

ஸ்ட்ரேட் செடல்மெண்டுக்கும் F. M. S. மலையாஸ்ட்ரேட்டும் முன்பணமில்லாமல் C. O. D. மூலியமாக அனுப்ப முடியாது.

விலாசம்:—கனக அண்டு கம்பேனி,
(H. 35) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

### பாதி விலை! பாதி விலை!!

ஓர் அதிசயமான சமையத்தைக் கைவிடாதீர்கள்.

### அசல் பட்டு அங்க வஸ்திரம்.

முன் விலை 1-க்கு ரூபா 7.
இப்போது விலை 1-க்கு ரூபா 3.

எங்கள் சொந்த ஆடரின்பேரில் அசல் பட்டு நூலினுல் 5 முழ நீழமும் 3 முழம் அகலமும் அதற்கு ஏற்றமாதிரி அழகிய குச்சிகள், கரைகள் வைத்துக் கெட்டிச் சாயத்தோடு தயார் செய்து வரவழைத்திருக்கிறேம். தினம் 1-க்கு 100 வஸ்திரத்திற்குமேல் சப்ளை செய்துகொண்டு வருகிறேம். எல்லாக் கலர்களிலும் தயாராக இருக்கிறது. இரண்டு அங்கவஸ்திரம் வாங்கினுல் ரூபா 5—8.

ரோல்ட் கோல்ட் ரிஸ்லெட் கெடியாரம், 6 மூலை, 4 மூலை பொன் கில்ட் டையல், புதிய மாதிரி, உயர்ந்த தினிசு ரூபா 7.

பொன்ட் லீவர் பாக்ட் கெடியாரம் ரூ. 5.

மாணிக்கம் அண்டு கம்பேனி,
நம். 12, அருணசல முதலி வீதி,
(Q. 62.) மதராஸ்.

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறர்கள். இதை நான் விளம்பரத்தில் உலகத்துக்கு பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இபபோது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாஞ, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால் ருத்தலுக்கு ரூபா ௫ தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டுக்களப்பு,
(M. 36.) சிலோன்.

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna,